31.07.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மலிவு விலை காய்கறி, ரூ.20 அரிசிக்கு முக்கியத்துவம்

மலிவு விலை காய்கறிகள் மற்றும், 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி விற்பனையை அதிகரிக்க, உணவு துறை அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். தமிழகத்தில், வெளிச்சந்தையில் காய்கறிகள் மற்றும் அரிசியின் விலை, 2013ல், கடுமையாக உயர்ந்தது. இதையடுத்து, 'பசுமை பண்ணை நுகர்வோர்' என்ற பெயரில், மலிவு விலை காய்கறி கடை மற்றும், 20 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி விற்பனை செய்யும் திட்டத்தை, தமிழக அரசு துவக்கியது.

மக்களிடம் வரவேற்பு மலிவு விலை கடைகளில், துவக்கத்தில் காய்கறிகள் தரமாகவும், விலை குறைவாகவும் இருந்ததால், மக்களிடம் வரவேற்பு காணப்பட்டது. தற்போது, காய்கறிகள் தரம் குறைவாக இருப்பதுடன், விலையும் அதிகமாக உள்ளதால், கடைக்கு வருவோரின் எண்ணிக்கை குறைந்து, விற்பனையும் பாதிக்கப்பட்டு உள்ளது. ஒரு கிலோ அரிசி, 20 ரூபாய்க்கு விற்கும் திட்டத்திற்காக, இந்திய உணவு கழகத்திடம் இருந்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், ஒரு லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்ய முடிவு செய்தது. முதல் கட்டமாக, ஒரு கிலோ அரிசி, 19.11 ரூபாய் என்ற விலைக்கு, 25 ஆயிரம் டன் அரிசி கொள்முதல் செய்தது. அதிகாரிகள் கொள்முதல்தற்போது, கூட்டுறவு சங்க அங்காடி, வாணிப கழகத்தின், 'அமுதம்' அங்காடி என, 300 கடைகளில், 20 ரூபாய்

அரிசி விற்கப்படுகிறது. இந்திய உணவு கழகத்திடம் இருந்து, தரமான அரிசியை, வாணிப கழக அதிகாரிகள் கொள்முதல் செய்தாலும், தரமற்றஅரிசியை விற்பனைக்கு அனுப்புவதாக கூறப் படுகிறது. இதனால், 20 ரூபாய் அரிசியின் தரம் மோசமாக இருப்பதால், மக்கள் யாரும் அதை வாங்கவில்லை. இந்நிலையில், இவற்றின் விற்பனையை அதிகரிக்க அரசு அதிகாரிகள், திடீரென முனைப்பு காட்ட துவங்கிஉள்ளனர்.

அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:சொத்து குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, முதல்வர் பதவியை இழந்ததால், காய்கறிகள் மற்றும் அரிசி விற்பனையில், துறை அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. தற்போது அவர், மீண்டும் முதல்வரானதால், காய்கறிகள் மற்றும் அரிசி விற்பனையை அதிகரிக்க முடிவு செய்துள்ளனர். இதற்காக, குறைந்த விலையில் தரமான காய்கறி; கல், குருணை நீக்கப்பட்ட அரிசி மீண்டும் விற்கப்பட இருக்கிறது. 2013 ஜூலை முதல் கடந்த, 20ம் தேதி வரை காய்கறி, 96.30 லட்சம் கிலோ; அரிசி, 16 ஆயிரம் டன் விற்பனையாகி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## பவானிசாகர் அணை இன்று திறப்பு

சென்னை:ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையில் இருந்து, அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால் வழியாக, முதல் போக பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடும்படி, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.அதை ஏற்று, பவானிசாகர் அணையில் இருந்து, இன்று முதல் தண்ணீர் திறந்து விட, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதனால், கோபிசெட்டிபாளையம், அந்தியூர், பவானி தாலுகாக்களில் உள்ள, 24 ஆயிரத்து, 504 ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறும்.

## பச்சை வண்ணத்திற்கு மாற்றப்படாத மீன்பிடி படகுகளுக்கு மானியம் 'கட்'

மீன்பிடி படகுகளை பச்சை வண்ணத்தில் மாற்றுவதற்கான கெடு, இன்றுடன் முடிகிறது. வண்ணம் மாற்றாத படகுகளுக்கு, டீசல் மானியம் ரத்து செய்யப்படுகிறது.'மீன்பிடிக்கும் படகுகளை, மாநில வாரியாக அடையாளம் காணும் வகையில், ஒவ்வொரு மாநிலத்துக்கும், ஒரு வண்ணம் இருக்க வேண்டும்' என, மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் உள்ள மீன்பிடி படகுகளுக்கு பச்சை நிறமும், மேற்பகுதியில் கறுப்பு நிறமும் தீட்ட வேண்டும் என, உத்தரவிடப்பட்டது. கலர் மாற்றுவதற்கு, மே மாதம் அவகாசம் முடிந்தது. இதை நீட்டிக்க வேண்டும் என, மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, ஜூலை, 31ம் தேதி வரை வழங்கப்பட்ட அவகாசம், இன்றுடன் முடிகிறது.இதுகுறித்து, மீன்வளத் துறை அதிகாரிகள் கூறியதாவது:இரண்டு மாதங்களுக்கு முன் நடத்திய சோதனையில், டீசல் மானியம் பெறும், 4,900 படகுகளில், 2,300 படகுகள் வண்ணம் மாற்றப்படாமல் இருந்தன. இதற்கான அவகாசம் இன்றுடன் முடிவதால், அனைத்துப் படகுகளும் பச்சை நிறத்துக்கு மாறியிருக்கும் என, நம்புகிறோம்.
இதற்கான சோதனை விரைவில் துவங்கப்படும். பச்சை நிறம் பூசாத படகுகளின் உரிமையாளர்களுக்கு, டீசல் மானியம் ரத்து செய்யப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

## அரிதான பொருளாகும் நீர்



உலகின் நீரில் 97 சதவீதம் கடலில் உள்ள உப்பு நீர் தான் உள்ளது. மீதமுள்ள 3 சதவீதம் மட்டுமே நன்னீர்.நல்ல நீரில் 68.7 சதவீதம் பனிமலைகளாகவும், பனிக்கட்டிகளாகவும் உள்ளன. 30.1 சதவீதம் நிலத்தடி நீர். மீதமுள்ள 1.2 சதவீதம் மட்டுமே ஆறு, ஏரி, குளம் மற்றும் அணைகளில் உள்ளன. வெப்பமயமாதல், காடுகளை அழித்தல் போன்ற இயற்கைக்கு எதிரான செயலால், நீர் ஆதாரம் மிகவும் கெட்டு விட்டது. உலகில் உள்ள பல பெரிய ஆறுகள் தற்போது அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.நிலத்தடி நீரையும் அளவுக்கு மேல் உறிஞ்சி வருகிறோம். இது மிகவும் ஆபத்தானது. வெப்பமயமாதல், காலநிலை மாற்றம் போன்றவற்றுக்கு இதுவும் ஒரு காரணம். நிலத்தடி நீரை உறிஞ்சுவதால் அந்த இடத்தின் இயற்கை சமநிலைக்கே பாதிப்பு ஏற்படுகிறது.நீரின் தேவை:விவசாயத்திற்கே அதிக நீர் தேவைப்படுகிறது. அடுத்ததாக தொழிற்சாலை, வீடு போன்றவற்றில் அன்றாட தேவைக்காக நீர் பயன்படுத்தப்படுகிறது. 1970ம் ஆண்டில் உலகில் இருந்த மொத்த நீரில் 25 சதவீதத்தை பயன்படுத்தினோம். இது 1980ல் 45 சதவீதமாகவும், 1990ல் 65 சதவீதமாகவும் அதிகரித்தது.

தற்போது உலக மக்களின் நீர்த்தேவை மொத்தத்தில் 80 சதவீதத்தை நெருங்கி விட்டது. இதே நிலை தொடர்ந்தால் நீர் அரிதான பொருளாகும் அபாயம் இருக்கிறது. நீர் இல்லாவிடில் உலகம் அழிந்து விடும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.மாசுபடுத்தும் காரணிகள்:மனித செயல்பாடுகளே நீர் மாசுபாட்டுக்கு முக்கிய காரணம். காற்று மாசுபட்டால் நீரும் கண்டிப்பாக மாசுபடும். தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுகள், வேதிப்பொருட்கள் மற்றும் ஆயில், பெயின்ட் போன்றவையாலும் நீர் மாசுபடுகிறது. இந்த வேதிப்பொருட்கள் ஆற்று நீரை மட்டுமல்லாது, நிலத்தடி நீரையும் கெடுக்கிறது. நிலத்தின் இயற்கை தன்மையையே மாற்றுகிறது. வீட்டு கழிவறை மற்றும் சாக்கடை ஆகியவற்றாலும் நீர் மாசுபாடு அடைகிறது.உலகம் முழுவதும் 25---40 சதவீதம் வரை நிலத்தடி நீரே குடிநீராக பயன்படுத்தப்படுகிறது. 60 சதவீத நிலத்தடி நீர் விவசாயத்துக்கு உபயோகப்படுகிறது.

## சின்ன வெங்காயம் விலை வீழ்ச்சி

திண்டுக்கல் :திருப்பூர் மாவட்டம், உள்ளூர் வரத்து கூடியதால் திண்டுக்கல்லில், சின்னவெங்காயம் விலை வெகுவாக குறைந்தது. திண்டுக்கல் வெங்காய மார்க்கெட் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி கிழமைகளில் நடைபெறுகிறது. இங்கு துறையூரிலிருந்து விதை வெங்காயம், உயர்ரக வெங்காயம் 5 டன் அளவில் வருகிறது. உயர்ரக சின்னவெங்காயத்தின் விலை கிலோ ரூ.60 முதல் ரூ.75 வரை விற்பனையானது. அதுவே தற்போது திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை, தாராபுரம் மற்றும் திண்டுக்கல், எரியோடு, குஜிலியம்பாறை, கோவிலூார் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து அதிகப்படியாக நாள் ஒன்றுக்கு 250 டன் அளவுக்கு வரத்து உள்ளது. இதனால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு இருந்த விலையை காட்டிலும்

வெங்காய விலை வெகுவாக சரிந்துள்ளது. தற்போது விலை ரூ.14 முதல் ரூ.26 வரை விற்பனையாகிறது. கிலோவுக்கு ரூ.49 அளவில் சரிவை சந்தித்து உள்ளது.

## மரவள்ளியில் செம்பேன் தாக்குதல் :கட்டுப்படுத்த அதிகாரி அறிவுரை

ராசிபுரம்:"மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள், மரவள்ளியில் செம்பேன் நோய் தாக்குதலை கட்டுப்படுத்த, "பிரோபார்ஜிட்' மருந்தினை பயன்படுத்த வேண்டும்' என, ராசிபுரம் தோட்டக்கலை துணை இயக்குனர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.அவர், வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் மாவட்டத்தில், விவசாயிகள், 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில், மரவள்ளி சாகுபடி செய்துள்ளனர். ராசிபுரம் தாலுக்காவுக்கு உட்பட்ட, நாமகிரிப்பேட்டை, மெட்டலா, கட்டணாச்சம்பட்டி, வெண்ணந்தூர், போதலை அடிவாரம், ஆர்.புதுப்பாளையம், வடுகம், பேளுக்குறிச்சி, மலையாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், அதிகளவில் மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது.ஆண்டுக்கு, 750 மி.மீ., குறைந்த மழையளவு கொண்ட ராசிபுரம் தாலுக்காவுக்கு உட்பட்ட பகுதிகளில், மானாவாரி நிலத்தில் பயிரிடப்படுவதால், விவசாயிகளின் வாழ்வாதார பயிராக கருதப்படுகிறது. மேலும், சாகுபடி செய்யப்பட்டு ஆறு, ஏழு மாதங்கள் கழிந்த பின், செம்பேன் நோய் தாக்கம் ஏற்படுகிறது.

இதனால், மரவள்ளி இலையின் அடிப்பாகத்தில் பச்சையம் குறைந்து, வெளிர் மஞ்சள் நிறத்துடன் சுருங்கி, காய்ந்து உதிர்ந்துவிடும். இதை, கட்டுப்படுத்த நடவு செய்த மூன்று, ஐந்து மாதங்களில், பூச்சி தாக்குதலை விரட்ட, டைக்கோபால் அல்லது டைத்தேன், பிரோபார்ஜிட் மருந்தினை, 2.5 மி.லி.,க்கு, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து இலையின் அடிபாகத்தில்

நன்கு பரவும்படி தெளிக்க வேண்டும். இதனால், மரவள்ளி பயிரில் செம்பேன் தாக்குதல் நோயை கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு, அவர் தெரிவித்துள்ளார்.

## மரவள்ளி கிழங்குக்கு கட்டுப்படியான விலைகிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை

தர்மபுரி:மரவள்ளி கிழங்குக்கு, இந்தாண்டு கட்டுப்படியான விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக, விவசாயிகள் மத்தியில், நம்பிக்கை ஏற்பட்டுள்ளதால், தர்மபுரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், விவசாயிகள், மரவள்ளி கிழங்கை சாகுபடி செய்துள்ளனர்.

தர்மபுரி மாவட்டத்தில், இறவை மற்றும் மானாவாரி பாசனத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பயிராக, மரவள்ளி கிழங்கு உள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல், மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக, அரூர் மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி தாலுகாவில், மரவள்ளி கிழங்கு சாகுபடி அதிகளவில் உள்ளது.கடந்த சில ஆண்டுகளாக, மரவள்ளி கிழங்குக்கு, போதிய விலை கிடைத்து வந்தது. இதனால், இந்தாண்டும், மரவள்ளி கிழங்குக்கு, கட்டுப்படியான விலை கிடைக்கும் என, விவசாயிகள் மத்தியில், நம்பிக்கை எழுந்தது. இதையடுத்து, தர்மபுரி மாவட்டத்தில், கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், பெய்த மழையை அடுத்து, மாவட்டத்தின், பல்வேறு பகுதியை சேர்ந்த, விவசாயிகள், மரவள்ளி கிழங்கை இறவை மற்றும், மரவள்ளி கிழங்கை சாகுபடி செய்தனர்.

தென்மேற்கு பருவமழை கை கொடுக்காத நிலையிலும், அவ்வப்போது ஒரு சில தினங்கள் பெய்த மழையால், மரவள்ளி கிழங்கு நன்கு வளர்ந்து வருகிறது.

குறிப்பாக, இறவை பாசனத்தில், சாகுபடி செய்யப்பட்டுள்ள, மரவள்ளி கிழங்கு செடிகள், நன்கு வளர்ந்து, பசுமையாக காணப்படுகிறது.மானாவாரியில், மரவள்ளி சாகுபடி செய்துள்ள விவசாயிகள், தென்மேற்கு பருவமழை தங்களை கைவிடாது என்ற, நம்பிக்கையில், வானில் தினந்தோறும் காணப்படும், கருமேங்களை கண்டு நம்பிக்கை அடைந்து வருகின்றனர். பருவமழை கைகொடுக்கும் பட்சத்தில், தற்போது, சாகுபடி செய்துள்ள, மரவள்ளி கிழங்குக்கு கட்டுபடியான விலை கிடைக்க வாய்ப்புள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். மேலும், இதன் மூலம், தங்களுக்கு, ஓரளவுக்கு வருவாய் கிடைக்கும் என, அவர்கள் தெரிவித்தனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**சின்ன வெங்காயம் பயிரிட்டால் 20 டன் மகசூல்**



சாம்பார் வெங்காயம் எனப்படும் சின்ன வெங்காயத்தைப் பயிரிட்டால் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை மகசூல் பெற்று லாபம் அடையலாம் என தோட்டக் கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சின்ன வெங்காயம் ஒரு வெப்ப மண்டலப் பயிராகும். இதன் வளர்ச்சிக்கு 15 முதல் 30 டிகிரி செல்சியஸ் வரை வெப்பநிலை அவசியம். நன்கு தண்ணீர் தேங்காத வளமான இரு மண்பாங்கான நிலம் சாகுபடிக்கு உகந்ததாகும். மண்ணின் கார, அமிலத் தன்மை 6 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை இருத்தல் சிறந்தது. மண் ஆழம் குறைவாக இருந்தாலே போதுமானது.

நிலம் தயாரித்தல் : நிலத்தை 2 முதல் 3 முறை உழுது கடைசி உழவின்போது ஒரு ஹெக்டேருக்கு 25 டன் மக்கிய தொழு உரமிட வேண்டும். பின்பு 45 செ. மீட்டர் இடைவெளியில் பார் பார்த்திகள் அமைத்து நிலத்தை தயார் செய்யவேண்டும்.

விதையளவு, பருவம்: ஒரு ஹெக்டேருக்கு விதை வெங்காயம் 1,500 கிலோ தேவைப்படும். விதை வெங்காயத்தை 10 சென்டிமீட்டர் இடைவெளியில் பார் பாத்திகள் இருபுறங்களிலும் அமைக்க வேண்டும். விதை வெங்காயம் நடவுக்கு ஏப்ரல், மே மாதங்கள் ஏற்றவை. உரமிடுதல்: நடவுக்கு முன்பு பார் பாத்திகளின் இருபுறமும் அடி உரமாக ஹெக்டேருக்கு 30 கிலோ தழைச்சத்தும், 60 கிலோ மணிச்சத்தும், 30 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும். பின்னர் நடவு செய்த 30 நாள் கழித்து 30 கிலோ தழைச் சத்தினை மேலுரமாக இட்டு மண்ணை அணைக்க வேண்டும். நீர் பாய்ச்சுதல்: விதை வெங்காயம் நட்டபின் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பின்பு 3 நாள்கள் கழிந்து உயிர் தண்ணீர் இட வேண்டும். அதன் பின்னர் 7 முதல் 10 நாள்கள் இடைவெளியில் நீர் பாய்ச்சுவது நல்லது. பின்செய் நேர்த்தி: விதை வெங்காயம் நடவு செய்த 30 நாள் கழித்து களை எடுத்து மேலுரமிட்டு மண் அணைந்து நீர் பாய்ச்சுதல் வேண்டும். பின்னர் தேவைக்கு ஏற்ப களை எடுத்து நிலத்தை சுத்தம் செய்யவேண்டும்.பயிர் பாதுகாப்பு: இந்தப் பயிரில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் பாதிப்பு பரவலாக காணப்படும். இதைக் கட்டுப்படுத்த மோனோகுரோட்டோ பாஸ் ஸ்டாக்ஸ் மருந்தை ஒரு சதவீதம் தெளித்து கட்டுப்படுத்தலாம். நோய்களில் இலைப்புள்ளி நோய் பரவலாக காணப்படும். அதை கட்டுப்படுத்த இன்டோபில் எம்.45 என்ற மருந்தை 2 சதவீதம் தெளிக்க வேண்டும். அறுவடை: வயலில் வெங்காயத்தின் இலைகள் 75 சதவீதம் காய்ந்து விட்டால் பயிர் முதிர்ச்சி அடைந்திருக்கும் என்பதை அறிந்து கொள்ளலாம். அறுவடைக்கு 7 நாள்கள் முன்பு நிலத்துக்கு தண்ணீர் பாய்ச்சவேண்டும்.

பின்னர் கொத்து அல்லது மண் தோண்டி மூலம் தோண்டி வேர், இலைகளை பறித்து சுத்தம் செய்ய வேண்டும். அதன்பின் நிழலில் காயவைத்து பாதுகாத்துக் கொள்ளலாம். மகசூல்: விதை ஊன்றிய 65

முதல் 85 நாள்களில் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை சின்ன வெங்காயம் மகசூல் கிடைக்கும் என தோட்டக் கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**காரீஃப் பருவத்துக்கான காப்பீட்டுத் திட்டம் அமல்**

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களுக்கும் நிகழாண்டுக்கான (2015) காரீஃப் பருவத்துக்கான தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் இந்திய வேளாண்மைக் காப்பீடு நிறுவனத்தின் மூலம் அமல்படுத்தப்படுகிறது. காரீஃப் பருவத்தில் 20 பயிர்களுக்கு வேளாண் காப்பீடு வழங்கப்படுகிறது. கார், குறுவை, சொர்ணவாரி நெல், சம்பா, தாளடி, பிசானம் நெல் வகைகள், கம்பு, சோளம், ராகி, மக்காச் சோளம், துவரை, உளுந்து, பச்சைப் பயிறு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, பருத்தி, வெங்காயம், மஞ்சள், வாழை, குச்சி பயிற்சி (மர வள்ளி), உருளை, அன்னாசி, கரும்பு ஆகியவற்றுக்கு ஏக்கருக்கு பிரிமியம் செலுத்தும் வகையில் பயிர் காப்பீடு செய்யப்படுகிறது. கார், குறுவை, சொர்ணவாரி நெல் பயிருக்கு காப்பீட்டு திட்டத்தில் கடன் பெறாத விவசாயிகள் சேருவதற்கான கடைசி நாள் 31.7.2015 அல்லது அந்தப் பயிருக்கான விதைப்பு, நடவு ஒரு மாத காலத்திற்குள் இருப்பின் காப்பீடு செய்து கொள்ள முடியும். கம்பு, சோளம், ராகி, மக்காச் சோளம், துவரை, உளுந்து, பச்சைப் பயிறு, நிலக்கடலை, எள்ளு, சூரியகாந்தி, பருத்தி, உருளை, வெங்காயம், அன்னாசிப்பழம், மஞ்சள், வாழை, மரவள்ளி பயிர்களுக்குக் காப்பீடு திட்டத்தில் சேர கடைசி நாள் 15.9.2015 அல்லது அப்பயிருக்கான விதைப்பு, நடவு ஒரு மாத காலத்திற்குள் இருப்பின் (எது முந்தையதோ) காப்பீடு செய்துகொள்ளலாம்.

கடைசி நாள்....

சம்பா, தாளடி பிசானம் கரும்புப் பயிர்களுக்கு காப்பீடு திட்டத்தில் சேர கடைசி நாள் 15.12.2015 அல்லது அந்தப் பயிருக்கான விதைப்பு, நடவு ஒரு மாத காலத்துக்குள் இருப்பின் (எது முந்தையதோ) காப்பீடு செய்து கொள்ளலாம். இந்தக் கூடுதல் மதிப்பீட்டுக்கான பிரிமியத் தொகையை பயிர் கடன் பெறாத விவசாயிகள் தங்கள் விருப்பத்தின் பேரில் செலுத்தலாம். பயிர்க்கடன் பெறாத விவசாயிகள் பிரிமியத்தை செலுத்த சிட்டா அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ் பெறப்பட்டு முன்மொழிவுப் படிவத்துடன் அவரவர் தாங்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் செலுத்த வேண்டும். பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் தாங்கள் பயிர் கடன் பெறும் வங்கியிலேயே இந்தத் திட்டத்தில் சேர்க்கப்படுவர்.

முன்மொழிவு படிவங்களை அருகில் உள்ள வேளாண் துறையிலோ, கூட்டுறவு, வர்த்தக வங்கியிலோ கேட்டு பெறலாம். இழப்பீடு வழங்கும் முறை: ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியம், பிர்காவிலும் மாநில அரசின் விவசாயத் துறையினால் பயிர் அறுவடை காலத்தில் பயிர் அறுவடை சோதனைகள் நடத்தப்பட்டு நடப்பு பருவத்தின் சாரசரி மகசூலை கடந்த 3 அல்லது 5 ஆண்டுகால உத்திரவாத மகசூலோடு ஒப்பிடும்போது நடப்பு பருவத்தின் மகசூல் எவ்வளவு குறைந்திருக்கிறதோ அந்த விகிதப்படி வட்டாரத்தில் உள்ள காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் அவரவர் தொகைக்கு ஏற்ப இழப்பீடு வழங்கப்படும் மேலும் விவரங்களுக்கு தலைமை மண்டல மேலாளர், இந்திய வேளாண்மை காப்பீட்டு, பழைய எண்.156, புதிய எண். 323, ஆந்திரா இன்சூரன்ஸ் பில்டிங், முதள் தளம், தம்புச் செட்டித் தெரு, பாரிமுனை, சென்னை-1 என்ற முகவரி அல்லது தொலைபேசி எண் 044-43403400-ஐ தொடர்பு கொள்ளலாம் என்று நிறுவனத்தின் தலைமை மண்டல மேலாளர் பாரதி தெரிவித்தார்.

**சில இடங்களில் மழை வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் முழுவதும் வெப்பச்சலனத்தின் காரணமாக கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இதனால் தமிழகத்தில் வெயிலின் தாக்கம் சற்று குறைவாகவே இருந்து வருகிறது. இந்த நிலையில், கடந்த இரு தினங்களாக தமிழகம் முழுவதும் வறண்ட வானிலையே நிலவுகிறது. வியாழக்கிழமையன்று காலை வரையிலான 24 மணி நேர நிலவரப்படி தமிழகத்தில் எந்த இடத்திலும் மழை பதிவாகவில்லை. ஆனால் வெப்பம் சற்று அதிகரித்துள்ளது.இந்த நிலையில் தமிழகம், புதுவையில் ஆங்காங்கே வெள்ளிக்கிழமை மழை பெய்யும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். மாலை அல்லது இரவில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**வேளாண்மை துணை இயக்குநர் ஆய்வு**

மயிலம் வட்டாரத்தில் வேளாண்மை துணை இயக்குநர் புதன்கிழமை ஆய்வு செய்தார்.

மயிலம் பகுதியில் தற்போது விவசாயிகள் மானாவாரி மணிலா சாகுபடி பணிகளைத் தொடங்கியுள்ளனர். அரசின் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் சார்பில் மணிலாவில் ஊடு பயிராக துவரை சாகுபடி பணிகள் பாதிராபுலியூரில் நடைபெற்றன. இதை விழுப்புரம் மாவட்ட வேளாண்மைத் துறை துணை இயக்குநர் இளவரசன் நேரில் ஆய்வு செய்தார்.

அப்போது விவசாயிகளிடம் அவர் பேசுகையில், மணிலா விதைப்பு கருவி மூலம் விதைப்பதால் சதுர மீட்டருக்கு 33 செடிகள் பராமரிக்கப்படுகிறது. இதனால் செடிகளுக்கு போதுமான காற்றோட்டம், சூரிய ஒளி, சத்துகள் கிடைப்பதால் அதிக மகசூல் கிடைக்கும். ஒரு ஏக்கருக்கு விதை மணிலா 45 கிலோ போதுமானதாக இருக்கும். மேலும், இதில் துவரையை ஊடுபயிராக செய்வதை ஊக்கப்படுத்த தமிழக அரசு ஏக்கருக்கு ரூபாய் 400 வீதம் மானியம் வழங்குகிறது. மேலும் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைக்கும் எனத் தெரிவித்தார்.

ஆய்வின்போது மயிலம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகர், வேளாண்மை அலுவலர் ஸ்டெல்லாமேரி, உதவி வேளாண்மை அலுவலர் பூவிழி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சொட்டுநீர் பாசனம் அமைக்க 100% மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு

சொட்டுநீர் பாசனத்தை 100 சதவீத மானியத்தில் அமைக்க விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து அத்துறையின் துணை இயக்குநர் (பொ) பொ.மணிமொழி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:நிலத்தடி நீர் மட்டம் குறைந்து வரும் இன்றைய காலகட்டத்தில் நீர் சேமிப்பு அவசியமாகிறது. தோட்டக்கலைத் துறை மூலம் சொட்டுநீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்கு சிறு விவசாயிகளுக்கு 75 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.

தோட்டக்கலை பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதால் பாசன நீர் சிக்கனமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் கூடுதல் பரப்பு சாகுபடி செய்யலாம். மேலும், களைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கூலி ஆட்களுக்கான செலவு குறைவதுடன், சாகுபடி செலவும் குறைகிறது. விளைவிக்கப்படும் பொருள்களின் தரம் அதிகரிக்கிறது.எனவே விவசாயிகள் அனைவரும் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைத்து தோட்டக்கலைத் துறையின் மூலம் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் சிட்டா அடங்கல், 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படம், குடும்ப அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், வட்டாட்சியரிடமிருந்து பெறப்பட்ட சிறு விவசாயி சான்று மற்றும் தாங்கள் விரும்பும் நிறுவனத்திடமிருந்து சொட்டுநீர் பாசனம் அமைக்க மதிப்பீடு ஆகியவை பெற்று சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசனம் அமைப்பதற்குரிய விவசாயிகளின் பங்குத் தொகையினை வங்கி வரைவோலையாக வட்டார தோட்டக்கலை அலுவலகங்களில் சமர்ப்பிக்கலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஏல முறையில் பருத்தி விற்பனைக்கு ஏற்பாடு**

திண்டுக்கல் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், ஏல முறையில் பருத்தி விற்பனை செய்வதற்கு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஏற்பாடு செய்துள்ளது.

இதுகுறித்து, திண்டுக்கல் விற்பனைக் குழு செயலர் எஸ்.ஏ.சையத் இப்ராகிம் வெளியிட்டுள்ள செய்தி: திண்டுக்கல் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த பருத்தி தற்போது அறுவடை செய்யப்பட்டு விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். கூடுதல் விலை கிடைப்பதற்காக, வெளிமாவட்டங்களுக்கும் கொண்டு செல்கின்றனர். விவசாயிகளுக்கு உதவும் வகையில், திண்டுக்கல் ஒழுங்குமுறை

விற்பனைக் கூடத்தில் பிரதி வாரம் புதன்கிழமைதோறும் ஏல முறையில் பருத்தி விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்ட விற்பனைக்குழு உத்தரவின்படி, இதில் பங்கேற்கும் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும், விற்பனை செய்த அன்றே பணம் பெற்றுக்கொள்ளலாம், நுழைவு கட்டணம் இல்லை, தரகு கிடையாது, எலக்ட்ரானிக் தராசு மூலம் எடை போடப்படும். கடந்த புதன்கிழமை நடைபெற்ற பொது ஏலத்தில், ஒரு குவிண்டால் பருத்தி ரூ.4275க்கு விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகளும், வியாபாரிகளும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**பருத்தியில் தரமான விதைகள்: விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

விவசாயிகள் தரமான பருத்தி விதைகளை உரிமம் பெற்ற விற்பனை நிலையங்களில் இருந்து வாங்கி பயன்படுத்த வேண்டும் என விதை ஆய்வுத்துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

விதை ஆய்வு துணை இயக்குநர் கிருஷ்ணகுமாரி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தங்கள் விளைநிலங்களில் பருத்தி சாகுபடி செய்வதற்கு தரமான விதைகளை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

இதை தவிர்த்து மளிகை கடையிலோ அல்லது வீட்டிற்கு கொண்டு வரும் விதைகளையோ வாங்கி பயன்படுத்த வேண்டாம்.

விதை விற்பனை நிலையங்களில், விதை குவியல் எண், காலாவதிநாள், விதை உரிம எண், விதை உற்பத்தி மைய விவரம், விதை பை அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள காலாவதி நாள், எந்த பருவத்திற்கு

ஏற்றது என்கிற விவரங்களையும் சரிபார்த்து வாங்க வேண்டும். மூடையில் வைத்து விற்பனை செய்யும் விதைகளை வாங்கக் கூடாது.

போலி விதைகளை யாரவது விற்பனை செய்வதை அறிந்தால் உடனடியாக விதை ஆய்வு மைய துணை இயக்குநர் அலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**ஜூலை 31-இல் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

கோவை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை (ஜூலை 31) நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஜூலை 31-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே, மாவட்டத்துக்கு உள்பட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு வேளாண்மை தொடர்பான பிரச்னைகளுக்கு மனுக்கள் அளிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அரசு விதைப் பண்ணையில் ஆட்சியர் ஆய்வு**

பொங்கலூர் அரசு விதைப் பண்ணையில் ஆட்சியர் கு.கோவிந்தராஜ் புதன்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

பல்லடம் அருகே தேவனம்பாளையத்தில் 35.05 ஏக்கர் பரப்பளவில் கடந்த 1956-ஆம் ஆண்டு அக்டோபர் 6-ஆம் தேதி அரசு விதைப் பண்ணை தொடங்கப்பட்டது. இந்நிலையில், தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டதால் பல ஆண்டுகளாக இந்த விதைப் பண்ணை மூடப்பட்டது. இங்கு மூட்புதர் மண்டிக் கிடந்தது.

இந்நிலையில், திருப்பூர் மாவட்ட ஆட்சியர் கு.கோவிந்தராஜ், இந்த விதைப் பண்ணையை மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர தீவிர நடவடிக்கை

மேற்கொண்டு, செயல்பாட்டுக்குக் கொண்டுவந்தார். இதன் காரணமாக இப்பண்ணை, விதை விற்பனை மூலமாக கடந்த 2013-2014 ஆம் ஆண்டில் ரூ. 1.96 லட்சமும், 2014- 2015ஆம் ஆண்டில் ரூ. 1.14 லட்சமும் வருவாய் ஈட்டியுள்ளது.

2014-2015 ஆம் ஆண்டில் 3,512 கிலோ மக்காச்சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அதில் 1000 கிலோ விதைகள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விற்கப்பட்டன. மீதமுள்ளவை விநியோகிக்க தயார் நிலையில் உள்ளது. மேலும், மக்காசோளம் 8 ஏக்கரில் பயிரிடப்பட்டு, 4,000 கிலோ விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு, சுத்திகரிப்புப் பணி நடைபெற்று வருகிறது. சோளம் ஒரு ஏக்கரில் பயரிடப்பட்டு 500 கிலோ விதைகள் சுத்திகரிப்பு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நிலக்கடலை 2.5 ஏக்கர், சணப்பை 5 ஏக்கர், முருங்கை 1.5 ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.51.50 லட்சம் செலவில் மணிக்கு 1 முதல் 1.5 மெட்ரிக் டன் விதை சுத்திகரிப்பு திறனுடைய புதிய விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி நிறைவடையும் நிலையில் உள்ளது. இப்பணிகளை ஆட்சியர் கு.கோவிந்தராஜ் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது கோட்டாட்சியர் முருகேசன், வட்டாட்சியர் அம்சவேணி, வேளண்மை இணை இயக்குநர் கனகசபை, துணை இயக்குநர் மகேந்திரன், விதைப் பண்ணை மேலாளர் வசந்தாமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**விவசாயிகள் சங்க மண்டலப் பயிற்சி முகாம்**

பல்லடத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மண்டலப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை தொடங்கியது. இதில் சாதியை ஒழிக்க என்ன செய்ய வேண்டும் என்ற தலைப்பில் அந்த அமைப்பின் அகில இந்திய துணைத் தலைவர் கே.வரதராஜனும், மதவாதத்தை எதிர்கொள்வது எப்படி என்ற தலைப்பில் டி.ஒய்.எப்.ஐ. முன்னாள் மாநிலத் தலைவர் என்.குணசேகரனும், கூட்டுறவு அமைப்பும் விவசாயிகளும் என்ற தலைப்பில் கூட்டுறவு ஊழியர் சங்கத் தலைவர் ஆ.கிருஷ்ணமூர்த்தியும் சிறப்புரையாற்றினர்.

**கொப்பரை விலை உயர்வு**

விலை வீழ்ச்சியிலிருந்து மீண்டு, படிப்படியாக கொப்பரை விலை அதிகரித்து வருவதால் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டைப் பகுதிகளில் 25 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இங்கு விளைவிக்கப்படும் தேங்காய்கள், திருப்பூர், கோவை, திண்டுக்கல், மதுரை உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கடந்தாண்டு பெய்த மழையால் தேங்காய் விளைச்சல் அதிகரித்தது. இரண்டு மாதங்களுக்கு முன், ஒரு கிலோ கொப்பரை ரூ. 98 ஆக இருந்த நிலையில், அதிக விளைச்சல் காரணமாக சந்தைக்கு தேங்காய் வரத்து அதிகரித்து, அதன் விலை வீழ்ச்சி அடையத் தொடங்கியது. கடந்த வாரம் கொப்பரை கொள்முதல் விலை கிலோ ரூ. 62 ஆக இருந்தது.

இந்நிலையில், திருமணம், கோயில் விழாக்கள், பண்டிகை உள்ளிட்டவைகளால் தேங்காய் நுகர்வு அதிகரிக்கத் தொடங்கியது. அதையடுத்து, கொப்பரை கொள்முதல் விலை படிப்படியாக அதிகரித்து தற்போது கிலோ ரூ. 73 ஆக உள்ளது. கொப்பரை விலையேற்றம்

தென்னை விவசாயிகளை நிம்மதியடையச் செய்துள்ளது. தொடர்ந்து பண்டிகைககள், திருமண நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை வரவிருப்பதால், இதன் விலை மேலும் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பில் உள்ளனர் தென்னை விவசாயிகள்.

**மொடக்குறிச்சியில் ரூ. 4 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் புதன்கிழமை தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் நடைபெற்றது.மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் 125 மூட்டைகளில் 2 ஆயிரத்து 560 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 81.05-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 75.15-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்ச விலை கிலோ ரூ. 72.25-க்கும் குறைந்தபட்ச விலை ரூ. 56.90-க்கும் என மொத்தம் ரூ. 1 லட்சத்து 97 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.இதேபோல், 11 டன் எடையுள்ள 31 ஆயிரத்து 422 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன்னுக்கு ரூ. 25 ஆயிரத்து 199-க்கும், குறைந்த பட்ச விலையாக ரூ. 19 ஆயிரத்து 700-க்கும் ஏலம் போனது. மொத்தம் 2 லட்சத்து 54 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

**எழுமாத்தூர் விற்பனை கூடத்தில் ரூ. 16 லட்சத்துக்கு வர்த்தகம்**

எழுமாத்தூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் தேங்காய் மற்றும் கொப்பரை வர்த்தகம் புதன்கிழமை நடைபெற்றது.எழுமாத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 447 மூட்டைகளில் 14 ஆயிரத்து 851 கிலோ எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை

அதிகபட்சமாக கிலோ ரூ. 78.90-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 73.25-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 72.15-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 55.95-க்கும் என மொத்தம் ரூ. 10 லட்சத்து 86 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. அதேபோல, 24 டன் எடையுள்ள 64 ஆயிரத்து 622 தேங்காய்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்சமாக டன் ரூ. 23 ஆயிரத்து 599-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 17, 899-க்கும் என மொத்தம் 5 லட்சத்து 52 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதில், மொத்தம் ரூ. 16 லட்சத்து 38 ஆயிரத்துக்கு கொள்முதல் நடைபெற்றது.

**வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.1.25 கோடிக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1.25 கோடிக்கு கொப்பரை ஏலம் புதன்கிழமை நடைபெற்றது. பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 3,216 மூட்டைகளில் 1,60,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 81.15-க்கும், அதிகபட்சமாக ரூ. 83.35-க்கும் விற்பனையானது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 55.95-க்கும், அதிகபட்சமாக ரூ. 80.05-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.1.25 கோடிக்கு விற்பனையானது என்று சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**ஆக.4-இல்வெள்ளாடுகளில் நோய் மேலாண்மைப் பயிற்சி**

செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளில், நோய் மேலாண்மை மற்றும் தடுப்பூசி முறைகள் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவசப் பயிற்சி நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் ஆகஸ்ட் 4-ஆம் தேதி காலை 9 மணிக்கு நடைபெற உள்ளது.

இதுகுறித்து, பயிற்சி திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: இந்த பயிற்சியில், செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளில் ஏற்படும் பல்வேறு நோய்கள், அதன் தாக்கம் மற்றும் தடுப்பு முறைகள் குறித்து விளக்கப்படும். மேலும், நோய்த் தாக்கம் ஏற்படும் கால அட்டவணைக்கு ஏற்ப, தடுப்பூசி அளிக்கும் முறைகள் குறித்தும் விளக்கம் அளிக்கப்படும்.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வம் உள்ளவர்கள் கலந்து கொள்ளலாம்.

விருப்பம் உள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரிலோ அல்லது 04286-266345 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொண்டு, ஆகஸ்ட் 3-ஆம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும்.

**மரவள்ளியில்செம்பேன் தாக்குதல்:கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**

மரவள்ளி பயிரிட்டுள்ள விவசாயிகள், மரவள்ளியில் செம்பேன் நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்த, பிரோபார்ஜிட் மருந்தினை பயன்படுத்தி, அந்நோயைக் கட்டுப்படுத்தலாம் என ராசிபுரம் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்ட செய்தி: நாமக்கல் மாவட்டத்துக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளில், 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மரவள்ளி சாகுபடி செய்துள்ளனர்.

மரவள்ளிக்கு நல்ல வடிகால் வசதியுள்ள 5.5 முதல் 7 கார அமில நிலை கொண்ட செம்பொறை மண் ஏற்றதாகும். இதில், ஆண்டு 100 செ.மீ மழையும், கடல் மட்டத்தில் இருந்து 1000 மீட்டர் உயரம் வரையிலும் நன்கு செழித்து வளரும். இந் நிலையில், ஆண்டுக்கு 750 மி.மீ. குறைந்த மழையளவு கொண்ட ராசிபுரம் தாலுகாவுக்கு உள்பட்ட பகுதிகளில், மானாவாரி நிலத்தில் பயிரிடப்படுவதால், விவசாயிகளின் வாழ்வாதாரப் பயிராக கருதப்படுகிறது.மேலும், சாகுபடி செய்யப்பட்டு ஆறு, ஏழு மாதங்கள் கழிந்த பின்பு, செம்பேன் நோய்த் தாக்கம் ஏற்படுகிறது. இதனால், மரவள்ளி இலையின் அடி பாகத்தில், பச்சையம் குறைந்து வெளீர் மஞ்சள் நிறத்துடன் சுருங்கி, காய்ந்து உதிர்ந்துவிடும்.இதனைக் கட்டுப்படுத்த, நடவு செய்த மூன்று, ஐந்து மாதங்களில் பூச்சி தாக்குதலை விரட்ட டைக்கோபால் அல்லது டைத்தேன், பிரோபார்ஜிட் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மி.லி. அளவில் கலந்து, இலையின் அடி பாகத்தில் நன்கு பரவும்படி தெளிக்க வேண்டும்.

இந்த முறையைப் பயன்படுத்தினால், மரவள்ளி பயிரில் செம்பேன் தாக்குதல் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ரத்து**

நாமக்கல் மாவட்டத்தில் வரும் 31 ஆம் தேதி நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து நாமக்கல் மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்தி: விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 31 ஆம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம் மறைவு காரணமாக, இந்தக் கூட்டம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

**சிறு,குறு தானியங்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்ய வலியுறுத்தல்**

சிறு, குறு தானியங்களை விளைவித்து மதிப்பு கூட்டி விற்பனை செய்தால் நல்ல லாபம் கிடைக்கும் எனவேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகளுக்கான பயிற்சி முகாமில் வலியுறுத்தப்பட்டது. கிருஷ்ணராயபுரம் வட்டம் போத்துராவுத்தன் பட்டியில் விளைபொருட்களின் மதிப்பைக் கூட்டுதல் குறித்த பயிற்சி வியாழக்கிழமை நடைபெற்றது. இதில்,வேளாண்மை துணை இயக்குநர் (வணிகம்) ராஜேந்திரன் விளைபொருட்களை மதிப்புக் கூட்டி சந்தைப்படுத்துதல் பற்றிய தொழில் நுட்பம் குறித்து விளக்கினார். விவசாய சங்கத் தலைவர் ராமசாமி, இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் பயிரிடும் சூரியகாந்தி, எள், சோளம் ஆகியவைகளை சந்தைப்படுத்திட வேளாண்மை விற்பனைத்துறை ஏற்பாடு செய்யவேண்டும் என்றார். தோட்டக்கலைத் துறை சார்பில், நெல்லி, கொய்யா, முருங்கை ஆகியவைகளைப் பயிரிட்டு மதிப்புக்கூட்டி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் அதிக லாபம் பெறுவது

குறித்துப் பேசினார். வேளாண்மை உதவி இயக்குநர் சேகர், இப்பகுதிக்கு உகந்த சிறு,குறு தானியங்கள் பயிர் செய்வதுடன் அதனை மதிப்புக்கூட்டி அதிக லாபம் பெறுவது குறித்துப் பேசினார்.

மனையியல் தொழில்நுட்ப வல்லுநர் மாலதி, மதிப்புக் கூட்டிய பொருள்களின் சந்தை வாய்ப்புகள், வேளாண்மை அறிவியல் மையம் புழுதேரியில் அளிக்கப்படும் மதிப்புக்கூட்டுதல் குறித்த பயிற்சி குறித்து விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் சாந்தி,விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பதற்கான உத்திகள் குறித்து விளக்கம் அளித்தார். வேளாண் வணிக அலுவலர் கோகுல் நன்றி தெரிவித்தார்.

**கடலூர் துறைமுகத்துக்கு மத்தி மீன்கள் வரத்து அதிகரிப்பு**



கடலூர்முதுநகர்

கடலூர் துறைமுகத்துக்கு நேற்று ஒரே நாளில் மட்டும் 20 டன் அளவிற்கு மத்தி மீன்கள் வரத்து இருந்தது.

<u>கடலூர் துறைமுகம்</u>

கடலூர் துறைமுகத்தில் இருந்து சிங்காரத்தோப்பு, சோனாங்குப்பம், அக்கரைகோரி, தேவனாம்பட்டினம், ராசாப்பேட்டை, சித்திரைப்பேட்டை உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தினமும் 100–க்கும் மேற்பட்ட பைபர் மற்றும் விசை படகுகளில் ஆழ்கடலுக்குள் சென்று மீன் பிடித்து வருகின்றனர். இவர்கள் வலையில் சிக்கும் மீன்களை கடலூர் துறைமுகத்திற்கு விற்பனைக்கு கொண்டு வருவது வழக்கம். இதனை அப்பகுதி மக்கள் மற்றும் வியாபாரிகள் ஆர்வமுடன் வாங்கி செல்வார்கள்.

மத்தி மீன்கள்

இந்நிலையில் நேற்று மீன் பிடிக்க சென்ற மீனவர்களின் வலையில் 20 டன் அளவில் சிறியரக மத்தி மீன்கள் சிக்கின. இதனை அவர்கள் கடலூர் துறைமுகத்துக்கு விற்பனைக்காக கொண்டு வந்தனர். மத்தி மீன்களின் வரத்தால் மொத்த வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு அதனை வாங்கி சென்றனர். 40 கிலோ எடை கொண்ட ஒரு பெட்டி ரூ.500–க்கு விற்பனையானது. இந்த விலையானது வழக்கத்திற்கு விட குறைவானதாகும். வியாபாரிகள் மீன்களை ஐஸ் கட்டிகளுடன் பெட்டிகளில் வைத்து லாரிகள் மூலம் கேரளாவுக்கும், கடலூர் அருகே உள்ள மீன் எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும் அனுப்பி வைத்தனர். மத்தி மீன்களின் வரத்து அதிகமாக இருந்ததால் நேற்று கடலூர் துறைமுகம் பரபரப்புடனும், சுறுசுறுப்புடனும் காணப்பட்டது.

**காவிரி தண்ணீர் பரமத்தி வேலூர் வந்தது பொதுமக்கள் மகிழ்ச்சி**



ஆடிப்பெருக்கையொட்டி மேட்டூர் அணையில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் பரமத்தி வேலூர் காவிரி ஆற்றுக்கு வந்தது. இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள பொதுமக்கள் ஆடிப்பெருக்கை உற்சாகமாக கொண்டாட தயாராகி வருகின்றனர்.

ஆடிப்பெருக்கு

நாமக்கல் மாவட்டம் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் ஒவ்வொரு ஆண்டும் பரமத்திவேலூரில் காவிரி ஆற்றில் ஆடிப்பெருக்கு பண்டிகையை கொண்டாடுவார்கள். அப்போது பரிசல் போட்டி, மோட்ச தீபம் மற்றும் பக்தர்கள் தலையில் தேங்காய் உடைக்கும் நிகழ்ச்சி ஆகியவை நடைபெறுவது வழக்கம்.மேலும் புதுமணத் தம்பதிகள் காவிரியில் நீராடி, பூஜைகள் செய்து, காவிரி தாயை வணங்கி மஞ்சள் கயிறு மாற்றிக்கொள்வதும் வழக்கம். மேலும் குலதெய்வ கோவில்களில் பாரம்பரியமாக வைத்துள்ள கத்தி, வேல், அரிவாள், கம்பு உள்ளிட்ட ஆயுதங்களை பரமத்தி வேலூர், ஜேடர்பாளையம், சோழசிராமணி, குமாரபாளையம் மற்றும் கரூர் மாவட்டம் தவிட்டுப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பக்தர்கள், பொதுமக்கள் காவிரி ஆற்றில் சுத்தம் செய்து பூஜைகள் செய்து வழிபடுவார்கள். மோட்ச தீபம்தொடர்ந்து மாலையில் நடைபெறும் பரிசல் போட்டியும், அதனை தொடர்ந்து நாடு நலம் பெறவும், விவசாயம் பெருகவும், நல்ல மழை பெய்து நாடு சுபிட்சம் பெறவும் காவிரியில் மோட்ச தீபம் விடும் நிகழ்ச்சிகள் நடைபெறும். மோட்ச தீப நிகழ்ச்சியை காணவும் பரிசல் போட்டிகளை கண்டு கழிக்கவும் லட்சக்கணக்கான பொதுமக்கள் காவிரி ஆற்றில் கூடுவார்கள்.இந்த நிலையில் காவிரி ஆற்றில் ஆடிப்பெருக்கு பண்டிகையை கொண்டாட தண்ணீர் திறந்து விடப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். பொதுமக்களின் கோரிக்கை ஏற்றும் பொதுமக்கள் ஆடிப்பெருக்கு பண்டிகையை கொண்டாடவும்

காவிரி ஆற்றில் தண்ணீர் திறக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.பொதுமக்கள் மகிழ்ச்சிஅதன்படி ஏற்கனவே காவிரியில் திறந்து விடப்பட்ட 2 ஆயிரம் கனஅடி தண்ணீர், அது தவிர மேலும் 4 ஆயிரம் கனஅடி தண்ணீர் சேர்ந்து மொத்தம் 6 ஆயிரம் கன அடி தண்ணீர் மேட்டூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்டு உள்ளது. மேட்டூர் அணையில் திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று முன்தினம் பரமத்தி வேலூர் காவிரி ஆற்றுக்கு வந்து சேர்ந்தது. காவிரி ஆற்றுக்கு வந்து சேர்ந்த தண்ணீரை பார்த்து இந்த பகுதி பொதுமக்கள் மிக மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். அவர்கள் கரைபுரண்டு ஓடும் காவிரி ஆற்றில் குளித்து மகிழ்வதோடு ஆடிப்பெருக்கு பண்டிகையை சிறப்பாக கொண்டாடவும் தயாராகி வருகின்றனர்.

**கூடலூரில் பல ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**



கூடலூரில் பல ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்ட தொடங்கி உள்ளனர்.

## தேயிலை விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தின் முதுகெலும்பாக தேயிலை விவசாயம் திகழ்கிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு வரை பச்சை தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வந்தது. இதனால் காய்கறி விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் தேயிலை விவசாயத்துக்கு மாறிய காலங்களும் உண்டு.

இந்த நிலையில் தேயிலை விவசாயம் நாளுக்குநாள் பாதித்து வருகிறது. குறிப்பாக பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காத காரணத்தால் மிகுந்த நஷ்டத்தில் விவசாயிகள் உள்ளனர். இதன் காரணமாக தேயிலை தோட்டங்கள் பராமரிக்க முடியாமல் பலஇடங்களில் சிறு தேயிலை தோட்டங்கள் புதர்கள் மண்டி கிடக்கும் அவலநிலையை காண முடிகிறது.

## காய்கறி விவசாயத்துக்கு மாற்றம்

கூடலூர் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு காய்கறி விவசாயத்தில் அதிக ஆர்வம் காட்டி வந்த விவசாயிகள் நாளடைவில் தேயிலை விவசாயத்தில் கவனம் செலுத்தி வந்தனர். தற்போது விலை கிடைக்காத காரணத்தால் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்கொண்டு வந்த காய்கறி விவசாயத்துக்கு மாறி வருகின்றனர்.

வழக்கமாக குன்னூர், கோத்தகிரி, மஞ்சூர், கொலக்கம்பை உள்ளிட்ட பகுதிகளில் மேரக்காய் அதிகளவு விளைவிக்கப்படுகிறது. இங்கிருந்து அறுவடை செய்யப்படும் மேரக்காய்கள் தினமும் லாரிகளில் ஏற்றி மேட்டுப்பாளையம், கோவை, ஈரோடு, சேலம், சென்னை உள்ளிட்ட இடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்பட்டு வருகிறது.

## கூடலூர் பகுதியில் மேரக்காய் விவசாயம்

இந்த நிலையில் தேயிலை விவசாயத்தில் போதிய லாபம் கிடைக்காததால் கூடலூர் பகுதி விவசாயிகள் காய்கறி விவசாயத்துக்கு

மாறி வருகின்றனர். கூடலூர் பகுதியில் மீண்டும் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகிறார்கள். இதனால் கூடலூர் கோக்கால் மலை அடிவாரத்தில் உள்ள 4–ம் நெம்பர் பகுதியில் மீண்டும் மேரக்காய் விவசாயம் 'களை' கட்டி உள்ளது.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:–

கூடலூர் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பு மேரக்காய், முட்டைக்கோஸ், கிளைக்கோஸ் உள்பட பல்வேறு காய்கறிகள் அதிகளவு விளைவிக்கப்பட்டது. அதன்பின்னர் தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வந்ததால் விவசாயிகள் தேயிலை பயிரிடுவதில் ஆர்வம் காட்ட தொடங்கினர். ஆனால் தற்போது மிகுந்த நஷ்டத்தில் தேயிலை விவசாயம் உள்ளதால் காய்கறி விவசாயத்துக்கு மீண்டும் மாறி வருகின்றனர்.

<u>பராமரிப்பு செலவு குறைவு</u>

இதனால் பல ஆண்டுகளுக்கு பிறகு மேரக்காய் விவசாயத்தை தொடங்கி உள்ளோம். ஆண்டு முழுவதும் விளையக்கூடிய பயிர் என்பதால் போதிய வருமானத்தை பெற முடியும். இந்த பகுதியில் விளையும் மேரக்காய்கள் கூடலூர் நகரில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் வருமானமும் கணிசமாக கிடைக்கிறது. தேயிலையை விட பராமரிப்பு செலவும் குறைவு. பூச்சி மருந்து அடிப்பது இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு ரூ.32¼ லட்சம் ஈட்டு கடன் உதவி கலெக்டர் மதிவாணன் தகவல்**




திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை விற்பனைக்குழுவின் மூலம் இதுவரை ரூ.32¼ லட்சம் ஈட்டு கடனாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என கலெக்டர் மதிவாணன் தெரிவித்தார்.
கலந்துரையாடல் கூட்டம்

திருவாரூர் மாவட்ட வேளாண்மை விற்பனைக்குழு அலுவலகத்தில் விற்பனை குழுக்கள் மற்றும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் செயல்பாடுகள் குறித்து விவசாயிகள் மற்றும் விற்பனையாளர்களுடன் கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மதிவாணன் தலைமை தாங்கினார்.அப்போது அவர் பேசியதாவது:- விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இடைத்தரகர்களின் குறுக்கீடுகள் இன்றி, விளைபொருள் விற்பனையை மேற்கொள்ளும் வகையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. விற்பனை

கூடங்கள் விவசாயிகளின் விளை பொருட்களுக்கு மறைமுக ஏலம் ஏற்படுத்தி, விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்க வழிவகுக்கின்றன. இங்கு வழங்கப்படும் சேவைகளுக்காக விவசாயிகளிடமிருந்து எவ்வித கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை.

கொள்முதல் செய்யும் விளைபொருட்களின் மதிப்பில் ஒரு விழுக்காடு மட்டும் வியாபாரிகளிடமிருந்து சந்தை கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. திருவாரூர் விற்பனை குழுவின் கட்டுப்பாட்டில் 8 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் செயல்பட்டு வருகின்றன.

ரூ.32¼ லட்சம் ஈட்டு கடன்தற்போது விவசாயிகள் பருத்தியினை அதிக அளவில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலமாக விற்று பயன்பெற்று வருகின்றனர். இதேபோல் நெல், உளுந்து, பச்சைபயறு, எள், நிலக்கடலை, தேங்காய் ஆகிய அனைத்து விளைபொருட்களையும் அருகில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு கொண்டு வந்து விற்று அதிக லாபம் அடைந்து வருகின்றனர். வியாபாரிகள் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் தங்களுக்கு தேவையான தரத்தில் தேவையான விளைபொருட்களை எளிதில் பெற்று கொள்ளலாம் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவும் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் இடையே கலந்துரையாடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் விற்பனைக்குழுவின் மூலம் விளைபொருள் ஈட்டு கடனாக நடப்பு ஆண்டில் இதுவரை 30 விவசாயிகளுக்கு ரூ.32 லட்சத்து 38 ஆயிரம்¢ வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிக துறை துணை இயக்குனர் மனோகரன், தோட்டக்கலை துறை துணை இயக்குனர் பாலகிருஷ்ணன், நபார்டு மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) பெரியகருப்பன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**நீடாமங்கலத்தில் எந்திரம் மூலம் குறுவை நாற்று நடும் பணி அதிகாரி ஆய்வு**



நீடாமங்கலம் பகுதியில் எந்திரம் மூலம் நடைபெற்று வரும் குறுவை நாற்று நடும் பணியை வேளாண்மை துணை இயக்குனர் மதியழகன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வு

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் பகுதியில் தற்போது குறுவை சாகுபடி பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. குறுவை பருவத்தையொட்டி அரசு அறிவித்த குறுவை சாகுபடி தொகுப்பு உதவி திட்டத்தின் கீழ் விவசாயிகள் பலர் தங்கள் வயல்களில் எந்திரம் மூலம் நடவு பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணிகளை வேளாண்மை துணை இயக்குனர் மதியழகன் நேரில் பார்வையிட்டு

ஆய்வு செய் தார். நீடாமங்கலம் அருகே உள்ள ராயபுரம் பகுதியில் ஆய்வு செய்தபோது அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதா வது:-குறுவை தொகுப்பு உதவி திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு விலையில்லாமல் எந்திரம் மூலம் நடவு செய்து கொடுக்க வேளாண்மை துறை தயாராக உள்ளது. இதற்கு வருகிற ஆகஸ்டு மாத இறுதிக்குள் விவசாயிகள் வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண் ணப்பிக்க வேண்டும். விலையில்லாமல் நடவு செய்ய விவசாயிகள் நாற்று தட்டு மூலமாகவோ, பாய் நாற்றங்கால் மூலமாகவோ நாற்று தயார் செய்து வைத்து இருக்க வேண்டும்.
வங்கி கணக்கில்...

குறுவை திட்டத்தில் வருகிற 15-ந் தேதிக்குள் விதைப்பு செய்யும் அனைத்து நெல் ரகங்களுக்கும் விவசாயிகள் மானியம் பெறலாம். இதற்கு விதை விட்ட உடன் சிட்டா, அடங்கல நகல்களை விவசாயிகள் வேளாண்மை துறை அலுவலகம் அல்லது வேளாணமை பாறியியல் துறை அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். நடவு செய்த ஒரு வார காலத்துக்குள் விவசாயிகளின் வங்கி கணக்கில் ஏக்கருக்கு ரூ.2,375 வீதம் வரவு வைக்கப்படும்.அதேபோல நாற்று விடுவதற்கான தட்டுகளும் 50 சதவீத மானியத்துடன் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அதிக உற்பத்தி: எந்திரம் மூலம் நடவு செய்தால் நாற்று பறி செலவு மிச்சம் ஆகும். அத்துடன் நாற்றின் வேர் அறுபடாது. பச்சை பிடித்து தூர் அதிகமாக பிடிக்கும். இதனால் அதிக உற்பத்தி மற்றும் கூடுதல் லாபம் கிடைக்கும். எனவே இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.ஆய்வின்போது வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் உடன் இருந்தார்.

தினகரன்

**முட்டை விலை உயர்வு 342 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையில் மேலும் 12 காசுகள் உயர்ந்து, 342 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் முட்டை விலையில் மேலும் 12 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதையடுத்து, 330 காசாக உள்ள முட்டை விலை 342 காசாக நிர்ணயிக்கப்பட்டது. முட்டையின் தேவை பல மண்டலங்களில் அதிகரித்துள்ளதால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். பிற மண்டலங்களில் முட்டை விலை விபரம் (காசுகளில்): பெங்களூரு 355, மைசூர் 345, ஐதராபாத் 324, மும்பை 364, விஜயவாடா 316, கொல்கத்தா 360, பர்வாலா 312, டெல்லி 325 காசுகள்.

**வெங்காயம் விலை தொடர்ந்து உச்சம்**

மும்பை: கடும் மழை காரணமாக வெங்காய வரத்து குறைந்துள்ளது. அதனால் வெங்காயத்தின் விலை தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர். மகாராஷ்டிர மாநிலம் நாசிக்கில் உள்ள லாசல்கான் வெங்காய சந்தையில் வெங்காயம் விலை தொடர்ந்து உச்சத்திலேயே உள்ளது. கடந்த செவ்வாயன்று லாசல்கான் சந்தைக்கு 9,000 குவிண்டால் வெங்காயம் வரத்து இருந்தது. ஒரு குவிண்டால் ரூ.3,600 வரை ஏலம் போனது. இதுபோல் பிம்பால்கான் பசாவந்த்

சந்தையில் 5,000 குவிண்டால் வெங்காயம் மட்டுமே வரத்து இருந்தது. அங்கு ஒரு குவிண்டால் ₹3,500 வரை ஏலம் போனது. நாசிக்கில், சில்லரை விலையில் ஒரு கிலோ வெங்காயம் 35 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.லாசல்கான் வேளாண் சந்தை உற்பத்தி குழு நிர்வாகி ஒருவர் கூறுகையில், ''பருவம் தப்பிய மழையால் வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டு சந்தைக்கு வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரித்து வருகிறது. வரும் நவம்பர் - டிசம்பரில் வெங்காய அறுவடை நடைபெறும். அதுவரை விலை கூடுதலாகத்தான் இருக்கும்'' என்றார். சென்னையில் மொத்த விலையில் பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூ.35க்கும், சின்னவெங்காயம் ரூ.50க்கும் விற்பனை செய்யப்படுகிறது

**உற்பத்தி குறைவால் தேங்காய் விலை உயர்வு**

நாகர்கோவில்: குமரி மாவட்ட விவசாயத்தில் முக்கிய பங்கு வகிப்பது தேங்காய். குமரியில் கடந்த ஏப்ரல் மாதத்தில் ஒரு கிலோ தேங்காய் ரூ.25க்கு விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். பின்பு தேங்காய் உற்பத்தி அதிகரிப்பால் விலை குறைய தொடங்கியது. கடந்த சில தினங்களுக்கு முன்பு ஒரு கிலோ தேங்காய் ரூ.15 முதல் ரூ.16 வரை கொள்முதல் செய்யப்பட்டது. இது போல் தேங்காய் மட்டையுடன் ஒரு தேங்காய் ரூ.7 மூதல் ரூ.8 வரை கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது விலை உயர்ந்து வருகிறது. தற்போது ஒரு கிலோ தேங்காய் ரூ.20, ரூ.21க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. அதுபோல் கதம்பையுடன் தரத்திற்கு ஏற்ப ரூ.11, ரூ.12க்கு கொள்முதல் செய்யப்படுகிறது. இது குறித்து தேங்காய் வியாபாரி ஜெயச்சந்திரன் கூறியதாவது: தற்போது தேங்காய் உற்பத்தி குறைந்து வருகிறது. தேவைகள் அதிகமாகி

வருவதால், குறைந்த தேங்காய் விலை தற்போது உயரத் தொடங்கியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

போதிய தண்ணீர் கிடைக்காததால் சொட்டு நீர் பாசனத்திற்கு மாறிய விவசாயிகள் வருமானம் மும்மடங்கு அதிகரிப்பு

கரூர், : கரூர் மாவட்டத்தில் பாசனத்திற்கு போதிய நீர் கிடைக்காததால் விவசாயிகள் சொட்டுநீர் பாசனத்தை பயன்படுத்த துவங்கியுள்ளனர். கரூர் மாவட்டத்தில் ஆண்டு சராசரி மழை அளவு 652மிமீ. 2013ம் ஆண்டுசராசரியை விட குறைவாக 488மிமீதான் மழைபதிவானது. 2014ம் ஆண்டு அதிக அளவாக 572மிமீ மழைபெய்தது. இந்த ஆண்டு பிப்ரவரியில் மழையில்லை. ஜனவரியில் கடந்த ஆண்டு பதிவான 0.25மிமீ விட இந்த ஆண்டு 26.29மிமீ மழைபெய்தது. மேலும்கோடை காலத்தில் அதிக மழைபெய்தது. கடந்த ஆண்டு கோடையில் 113மிமீ மழைபெய்தது, இந்த ஆண்டுகோடையில் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் 243மிமீ மழைபெய்துள்ளது. நிலத்தடிநீர் மட்டம் உயர்ந்துள்ளது. பாசனத்திற்கு நிலத்தை பயன்படுத்த இந்த மழை உதவியது. சராசரியை கணக்கை விட அதிக மழைபெய்தாலும் பாசனத்திற்கு தேவையான காலகட்டத்தில் போதுமான தண்ணீர் கிடைப்பதில்லை. அமராவதி ஆற்றில் குறிப்பிட்ட காலத்திற்குமட்டும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதேபோல காவிரியில் குடிநீர், மற்றும் ஆடிப்பெருக்கு கொண்டாட தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.காவிரி, அமராவதி பாசன பகுதிகள் தவிர, நிலத்தடி நீர்பாசனத்தை நம்பி 7ஆயிரம் எக்டேர் உள்ளது. கர்நாடக அணைகளில் கடந்த ஆண்டு தண்ணீர் நிரம்பிய அளவுக்கு இந்த ஆண்டு அணைகள் நிரம்பவில்லை. கரூர் மாவட்டத்தில் கரூர், கிருஷ்ணராயபுரம், குளித்தலை காவிரிக்கரைப்பகுதில் சம்பா சாகுபடி நடைபெறுகிறது. கடந்த ஆண்டு 8ஆயிரத்து 245எக்டேர் பரப்பளவில் நெல் பயிரிப்பட்டது. அமராவதி அணையில் இருந்து தேவையான

அளவுக்கு தண்ணீர் கிடைக்காவிட்டாலும் ஓரளவுக்கு தண்ணீர் வந்தது. அரவக்குறிச்சி, க.பரமத்தி, சின்னதாராபுரம், தொக்குப்பட்டி மற்றும் தாந்தோணி ஒன்றியத்தில் சில பகுதிகளில் சம்பா சாகுபடி செய்யப்பட்டது. வழக்கமாக காவிரி பாசனம்அல்லாத பகுதிகளில் 5 ஆயிரம் எக்டேருக்கு மேல் சம்பா சாகுபடி செய்யப்படும். கடந்த ஆண்டு 3600 எக்டேரில் சம்பா பயிரிடப்பட்டது. மொத்தம் கரூர் மாவட்டத்தில் சுமார் 12ஆயிரம் எக்டேரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டது. இதில் 9500 எக்டேரில் திருந்திய நெல்சாகுபடி முறையில் அறுவடை செய்யப்பட்டது. தற்போது பாசனத்திற்கு தண்ணீர் உறுதிசெய்யப்படாததால் சொட்டுநீர்பாசனத்தை நம்பி விவசாயிகள் உள்ளனர். கரூர் மாவட்டத்தில் குறுவை, சம்பா, நவரை, ஆகிய பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 95சதவீதம் நெல் சாகுபடி சம்பா பருவத்திலேயே மேற்கொள்ளப்படுகிறது. தண்ணீர் தேவையை சமாளிக்க சொட்டுநீர் பாசன முறையை விவசாயிகள் நம்பியுள்ளனர். சொட்டுநீர் பாசன முறையை அமைத்துக்கொள்ள சிறுகுறு விவசாயிகளுக்கு 100சதவீதம் மானியம் அளிக்கப்படுவதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.சிறு குறு விவசாயிகள் பயன்பெற ஏக்கருக்கு ரூ.43,816 வீதம் 100சதவீதம் மானியத்தில் 900ஏக்கரில் சொட்டு நீர் பாசனம் அமைக்கப்பட்டது. சொட்டுநீர் பாசனம் மூலம் 2மடங்கு தண்ணீர் மீதம் ஆகிறது. மகசூல் அதிகம் கிடைக்கிறது. களை கட்டுப்படுத்தப்படுகிறது. வருடம் முழுவதும் சாகுபடி செய்வதால் விவசாயிகளின் வருமானம் மும்மடங்கு அதிகரிக்கிறது. பயறு வகைகள், எண்ணை வித்து உற்பதிக்கும் இம்முறையை கடைபிடித்து அதிக மகசூல் பெறலாம் என அவர்கள் தெரிவித்தனர்.சிறு குறு விவசாயிகள் 100சதவீத மானியத்தில் சொட்டுநீர் பாசனம் அமைத்துக்கொள்ளலாம்.

நுண்ணீர் பாசனத்தின் பயன்கள்: குறைந்த அளவு நீரில் அதிகபரப்பளவு சாகுபடி, களைகளை கட்டுப்படுத்துவது, நீரில் கரையும் உரங்களையும், மருந்துகளையும், உயிர்உரங்கள், சொட்டுநீர் பாசன கருவிகள் மூலம் பயிர்களுக்கு வழங்கலாம். இதனால் மகசூல் அதிகரிக்கும். பூச்சிநோய் தோக்குதல் சதவீதம் குறைவு., தரம் அதிகரித்து விரைவில் அறுவடைக்கு வரும். விவசாயம் சார்ந்த களை எடுப்பது, நீர்கட்டுவது,உரம் வைப்பது,மருந்து அடிப்பதற்கு செலவு குறையும். 30முதல் 40சதவீதம் மகசூல் அதிகரிக்கும். காற்றோட்டம், நுண்ணுயிர்கள் வளர்ச்சி அதிகரிப்பதால் மண்வளம் பாதுகாக்கப்படும் என வேளாண் துறையினர் தெரிவிக்கின்றனர்.

**புதுகையில் மல்லிகை விலை வீழ்ச்சி**

புதுக்கோட்டை, : புதுக்கோட்டையில் மல்லிகை பூ விலை குறைந்ததால் பெண்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் வியாபாரிகளோ கவலையடைந்தனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வேங்கிடகுளம் மற்றும் வம்பன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் விவசாயிகளால் குண்டு மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. இந்த மல்லிகை பூக்கள் தினமும் பறிக்கப்பட்டு புதுக்கோட்டை பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள பூ மார்க்கெட்டில் ஏலம் விடப்படும். சென்ற மாதம் முகூர்த்த நாளாக இருந்ததால் கிலோ ரூ.300 முதல் ரூ.400 வரை குண்டுமல்லிகை பூக்கள் விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் ஆடி மாதம் துவங்கியதில் இருந்து மல்லிகை பூ விலை சரிந்தது. தற்போது ஒரு கிலோ பூ ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் பூ வாங்கி சூடும் பெண்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால், விவசாயிகள், வியாபாரிகள் மல்லிகை பூ விலை குறைந்ததால் கவலையடைந்துள்ளனர்.

**மழையால் விவசாய பணிகள் துவக்கம்**

திருமயம், : திருமயம் பகுதியில் கடந்த ஒரு வார காலமாக சாரல் மழையும், பலத்த மழையும் பெய்து வருகிறது. இதனால் ஏரி குளங்களில் வரத்து வாய்க்கால்கள் மூலம் 33 ஊராட்சிகளிலும் சராசரி 30 சதவீதம் மட்டுமே நீர்நிலைகளில் மழைநீர் நிரம்பி உள்ளது. பல ஊராட்சிகளில் 10 முதல் 20 சதவீதம் வரை நீர்நிலைகள் மட்டுமே நிரம்பி உள்ளது. இந்த நிலையில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை மழை பரவலாக பெய்துள்ளது. இதனால் விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் தங்களுடைய ஆயத்த பணிகளை துவக்கி உள்ளனர்.

**ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறையை கடைபிடித்தால் அதிக மகசூல்**

தஞ்சை, : குறுவை சாகுபடியில் விவசாயிகள் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறையை கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள குறுவை நெற்பயிரில் மேற்கொள்ளப்பட்ட பூச்சி கண்காணிப்பு நடவடிக்கைகளில் தண்டு துளைப்பான் பூச்சி, பச்சை தத்துபூச்சியின் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. எனவே தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்தி அவற்றை கட்டுப்படுத்த வேண்டும். தண்டு துளைப்பான் பூச்சியானது நெல் நாற்றங்காலில் இலையின் நுனியில் பழுப்புநிற முட்டைகளை கூட்டமாக இடும். முட்டைகள் பாலேடு போன்ற வெள்ளை நிறமாகவும், தட்டையாகவும் முட்டை வடிவத்திலும் இருக்கும். இவை கூட்டமாக திரளாக இடப்பட்டு வெளிர் மஞ்சள் நிற இழைகளால் மூடப்பட்டிருக்கும். இவை பெரும்பாலும் இலைகளின் நுனிப்பகுதிக்கருகே வைக்கப்பட்டிருக்கும்.

இதனால் நாற்றின் நுனி பகுதியை வெட்டியபின் நடவு செய்ய வேண்டும். இந்த முட்டைகள் பொரித்து வெளிரிய மஞ்சள் நிறத்தில் கரும்புழுப்பு நிற தலை கொண்டு அதில் முன் மார்பு கவசத்துடன் கூடிய புழுக்கள் தழைப்பருவத்தில் தண்டுகளில் நுழைந்து வளரும். இவை தண்டுகளை உட்கொள்வதால் அதன் நடுப்பகுதி காய்ந்துவிடும். இதுவே குருத்து காய்தல் எனப்படுகிறது. நன்கு வளர்ச்சியடைந்த பயிரின் முழு தானிய கதிர்களும் காய்ந்துவிடும். மிஞ்சியிருக்கும் தட்டையான கதிர் வெண்கதிர் எனப்படுகிறது. குருத்தை பிடித்து இழுக்கும்போது அவை எளிதாக கையோடு வந்துவிடும். பழுப்புநிற அந்துப்பூச்சிகள் வயலில் இருக்கும். பொருளாதார சேதஅளவான 2 முட்டை திரள்கள் தழை பருவத்தில் 10 சதவீதம் தூர் அழுகல் அல்லது பூக்கும் பருவத்தில் 2 சதவீதம் வெண்கதிர்கள் காணப்பட்டால் தொடர்ச்சியாக வயலில் நீர் தேங்குவதை தவிர்க்க வேண்டும். பொருளாதார சேத அளவுக்குமேல் சேதநிலை காணப்பட்டால் ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் நீரில் மோனோகுரோட்டாபாஸ் 200 மி.லி அல்லது பிரோபெனோபாஸ் 400 மி.லி தெளிக்கலாம். மேலும் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளில் பேசில்லஸ் துருன்ஜெனிஸிஸ் வகை மற்றும் வேப்பங்கொட்டை சாற்றை கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். பச்சை தத்துப்பூச்சியால் தாக்கப்பட்ட நெற்பயிரின் இலைகள் நுனி முதல் அடிப்பகுதி வரை முழுவதும் மஞ்சன் நிறமாக மாறிவிடும். இப்பூச்சி பயிரை முழுவதுமாக தாக்கி அதன் சாற்றை உறிஞ்சுவதால் பயிரின் வீரியம் குறைந்து வளர்ச்சி குன்றி குட்டையாக காணப்படும். பயிர் வாடுதல் அல்லது முற்றிலுமாக காய்ந்து காணப்படும். இலையுறை அல்லது நடுநரம்புகளுக்குள் வெள்ளையான அல்லது வெளிறிய மஞ்சள் நிறமான முட்டைகள் இருக்கும். பயிரின் மேல்பகுதியில் வெளுத்த பச்சைநிற முதிர்ப்பூச்சிகள் இருக்கும். இப்பூச்சிகள் முற்றிலுமாக மகசூல்

இழப்பை ஏற்படுத்தக்கூடிய துங்ரோ மற்றும் நெல் மஞ்சள் குட்டை போன்ற வைரஸ் நோய்களை பரப்புகின்றன. பச்சை தத்துப்பூச்சியை கட்டுப்படுத்த அடியுரமாக வேப்பம்புண்ணாக்கு 12.5 கிலோவை நாற்றங்காலில் இடலாம். மேலும் நீர்வாழ் நாவாய்பூச்சிகள், ஊசித்தட்டான், தட்டான் பூச்சிகள், சிலந்திகள் ஆகிய பூச்சிகளால் பச்சை தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். எனவே ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்படுத்தும் முறைகளை கையாண்டால் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தெரிவித்துள்ளார்.

**பனைமரங்களை பயிரிட நடவடிக்கை வேண்டும்**

க.பரமத்தி, : அழிந்து வரும் பனை மரங்களை காப்பாற்றவும், புதிய பனைமரங்கள் நடுவதற்கும் விவசாயிகள் முன்வரவேண்டும் என இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.திருக்குறளில் கூறப்பட்ட 2 மரங்களில் ஒன்று பனை மரமாகும்..தமிழ் எழுத்துகள் முதலில் பதியபட்டது பனை ஓலையில் தான். பனைமரம் தமிழர்களின் அடையாளமாக இருந்து வருகிறது. தமிழர்களின் மூதாதையர்கள் வாழும் பகுதியில் மட்டுமே பனைமரங்கள் இருந்து வந்துள்ளது. சங்க காலம் முதல் தமிழர்களின் வாழ்வில் பனைமரம் ஒரு அங்கமாகவே இருந்து வந்தது. பனங்கருக்கு என்று சொல்லப்படும் சிறு மரங்களை உடைக்கும்போது அதில் கிடைக்கும் பச்சை குருத்து உண்பதற்கும், சுவைக்கும், சத்தானதாகவும் இருக்கிறது. பனை ஓலைகள் வீடுகள் மேயவும், படுப்பதற்கும், உட்காருவதற்கும், பண்டங்கள் கட்டுவதற்கும், பாய்கள் செய்யவும் பயன்பட்டு வந்தது.கடுமையான வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு தீவனமாகவும் இந்த பனை ஓலைகள் தரப்பட்டது. இப்போதும் கூட பனை ஓலையில் செய்யப்பட்ட விசிறிகளுக்கு நல்ல

வரவேற்பு இருக்கிறது. இவ்வாறு மனித வாழ்வில் உணவு தேவைக்கு மட்டுமில்லாமல் வீடுகள் கட்டுவதற்கும் பல வகைகளில் உதவுகிறது. சமீப காலமாக இரும்பு, சணல், நைலான், எரிவாயு போன்ற நவீன சாதனங்கள் வந்து விட்டதால் பனைமரத்தின் அவசியம் குறைந்து விட்டது. இம்மரம் எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தண்ணீர் இல்லாமலே வாழும் தன்மையுடையது. காடு, தோட்டம் என்று வித்தியாசம் இல்லாமல் விவசாயிகள் இவற்றை வளர்த்து வந்தனர். இந்தியாவில உள்ள 8 கோடி பனைமரத்தில் 5 கோடி மரங்கள் தமிழகத்தில் இருப்பதாக புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

பனையில் நெய்யபட்ட கூடைகள்,பாய், துாரிகைகள் இன்று பயன்பாட்டில் இல்லாமல் போய்விட்டது. பனையிலிருந்து 843க்கும் மேற்பட்ட பனை சார்ந்த பொருள்கள் தயாரிக்கபடுகின்றன.ஆனால் இந்த பனைக்கு தண்ணீர் பாய்ச்சுவது, பூச்சி மருந்து போன்றவைகள் தேவையில்லை. பனைமரம் வளர்ந்து பலன் தர 15ஆண்டுகள் ஆகும். கரூர் மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் ஆயிரத்து 200அடியிலிருந்து ஆயிரத்து 2ஆயிரம் அடி வரை அகல அதால பாளத்திற்கு போனதால் பனை மரங்கள் குறைந்து போனதற்கு ஒரு காரணமாகும். இதனை வளர்த்தால் நிலத்தடி நீர் உயரும் வாய்ப்புள்ளது. பருவ மழை பொய்த்து விட்டதால் பனை மரங்களை சில இடங்களில் குறைந்த விலைக்கு விற்கும் அவலமும் நடந்துள்ளது.புனை மரம் வெட்ட,வெட்ட இன்றும் குளமும்,வறண்டு நிலம் காய்ந்து தரிசாகி வருவதை கண்கூடாக காண்கிறோம். பனைமரம் வைத்தால் நீர்நிலைகள் மீண்டும் உயிர்பெறும். தற்போது பெயரளவில் உள்ள பனை தொழிலாளர் வாரியத்திற்கு உயிர் கொடுத்து பனைபொருள் வளர்ச்சி கழகத்தை உருவாக்கினால் குறைந்தது ஏராளமானோர் பயன் பெறுவர்.இது குறித்து இயற்கை ஆர்வலர்கள் கூறியதாவது.விளைச்சல்,நிலங்கள் ,நீராதாரம் குறைவு உள்ளிட்ட பல

பிரச்னைகள் உள்ளது. பயிர் விளைச்சல் விட பனைமரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் காட்டினால் லாபம் ஈட்ட முடியும்.பனை பொருள்கள் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு அதிகமாக உள்ளது. எனவே பனைமரங்கள் நடுவதற்கு விவசாயிகள் முன் வரவேண்டும் என்றனர்.

## இயற்கை விவசாய முறையை பின்பற்றினால் ஒரு ஏக்கர் நிலத்தில் 3 மாதத்தில் ரூ15 லட்சம் வருமானம் வேளாண்துறை மாணவிகள் செயல்விளக்கம்

கொள்ளிடம், : ஒரு ஏக்கர் நெற்பயிர் சாகுபடி நிலத்தில் இயற்கை விவசாய முறை மூலம் மூன்றே மாதத்தில் ரூ.15லட்சம் வருமானம் ஈட்டுவதற்கான வழிமுறைகளை அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்துறை மாணவிகள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள மாதானம் கிராமத்தில், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல இறுதியாண்டு படிக்கும் குழு எண் 2ஐ சேர்ந்த மாணவிகள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. ஊராட்சி தலைவர் குமார் தலைமை வகித்தார். மாணவி அகிலா வரவேற்றார். கூட்டுறவு வங்கி தலைவர் உத்திராபதி, முன்னாள் ஊராட்சி தலைவர் தங்கபாண்டியன், தலைமையாசிரியர் உதயகுமார், முன்னாள் ஊராட்சி தலைவர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் மாணவிகள் ஒரு ஏக்கர் நிலத்தில் மூன்றே மாதத்தில் ரூ.15 லட்சம் லாபம் ஈட்ட எளிய வழி முறையை செயல்விளக்கம் மூலம் செய்து காட்டினர். அதன்படி, ஒரு ஏக்கர் நெற்பயிர் சாகுபடி செய்யும் நிலத்தில் வயலின் வரப்பை ஒட்டி

சுமார் 10 அடி உயரத்தில் 8 கூண்டுகள் அமைத்து அதில் கோழிகள் வளர்க்க வேண்டும். ஒவ்வொரு கூண்டின் அடிப்பகுதியில் சுமார் ஒரு அடி ஆழத்திற்கு பள்ளம் தோண்டியிருக்க வேண்டும். அந்த வயல் முழுவதும் நடவுப்பயிர் செய்திருக்க வேண்டும். தண்ணீர் எப்பொழுதும் மீன்கள் நீந்தி செல்லும் அளவிற்கு வயலில் சீராக இருக்கும் அளவிற்கு பராமரிக்க வேண்டும். குறிப்பிட்ட சில வகையான மீன்களை வயலில் வளர்க்க வேண்டும். கூண்டுகளில் வளர்கின்ற கோழிகள் இடும் எச்சங்களை மீன்கள் தின்று உயிர் வாழும். அது மட்டுமின்றி, நெற்பயிரை தாக்குகிற வெட்டுக்கிளி போன்ற பூச்சிகளையும், புழுக்களையும் மீன்கள் உணவாகக் கொண்டு பயிரை பூச்சித்தாக்காது. மேலும் வயலுக்கு உரம் இடவேண்டிய அவசியம் இல்லை. மீனின் எச்சத்தினால் பயிர் செழிப்பாக வளரும், களையும் வளராது. இப்படி செய்வதன் மூலம் கோழி, மீன் வளர்ப்பு பயிர் சாகுபடி ஆகிய மூன்றும் ஒரே நேரத்தில் நடைபெறுகிறது. இதன் மூலம் மூன்றே மாதத்தில் ரூ.15 லட்சம் லாபம் ஈட்டலாம். விவசாயிகள் இத்தகைய இயற்கை விவசாய முறையை பின்பற்றி லாபம் ஈட்டலாம் என்றனர். கிராம கல்விக்குழு தலைவர் ஆனந்த் நன்றி கூறினார்.

## 2வது சீசனுக்கு சிம்ஸ் பூங்காவில் 1 லட்சம் மலர் செடி நடவு பணி

குன்னூர், : 2வது சீசனுக்காக 30 வகையான 1 லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணி குன்னூர் சிம்ஸ் பூங்காவில் நேற்று துவங்கியது. நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ் பூங்கா இயற்கையான பூங்கா என்பதால் அரியவகை மரங்கள் மற்றும் மூலிகை செடிகள் அதிகளவில் உள்ளன.

இதனால் இங்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை தொடர்ந்து இப்பூங்காவை பொலிவுபடுத்தி அரிய வகை

மரங்கள் மற்றும் மூலிகை செடிகளின் விவரங்கள் குறித்தும் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.இதற்கிடைய 2ம் சீசனுக்காக இப்பூங்காவில் ஒரு லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணியை தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் டாக்டர் ராம்சுந்தர் துவக்கி வைத்து கூறுகையில்:'இந்தாண்டு கோடை சீசனுக்கு சுற்றுலா பயணிகள் அதிகளவில் வந்து சென்றுள்ளனர். வரக்கூடிய 2வது சீசனுக்கும் சுற்றுலா பயணிகள் அதிகளவில் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் சால்வியா, மேரிகோல்டு, ஜினியா, டேலியா, காஸ்மாஸ், பேன்ஸி உள்ளிட்ட 30 வகையிலான ஒரு லட்சம் மலர் செடிகள் நடவு செய்யும் பணியை துவக்கி உள்ளோம். இம்மாத இறுதிக்குள் நடவு பணி நிறைவு பெறும்', என்றார். நடவு பணியின் போது பூங்கா மேலாளர் மூர்த்தி உடனிருந்தார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஒத்திவைப்பு**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (31ந்தேதி) நடைபெறவுள்ளது.இதுகுறித்து பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் 30.07.2015 அன்று அரசுவிடுமுறை என்று உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து, 30.7.2015 (இன்று) நடைபெறவிருந்த பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (31ம்தேதி) காலை 10 மணியளவில் மாவட்ட கலெக்டர் கூட்டமன்றத்தில் நடைபெற உள்ளது. இதில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன் உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி

விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் குறைகளை தெரிவிக்கலாம்.

**மண் பரிசோதனை செய்து உரமிடுவதால் செலவு குறைந்து, அதிக மகசூல் பெறலாம்**

பெரம்பலூர்,: மண் பரிசோதனை செய்து உரமிடுவதால் செலவு குறைவதுடன் அதிக மகசூலும் பெற முடியும் என்று வேளாண் அதிகாரி வலியுறுத்தியுள்ளார்.

பெரம்பலூர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) விஜயலட்சுமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவரி பயிராக ஆடிப் பருவத்தில் பருத்தி பயிரிட மழையை எதிர் நோக்கி விவசாயிகள் ஆயத்தமாகி வருகின்றனர். இந்த தருணத்தில் அடியுரம் இடுவது என்பது மிகவும் அவசியம். பொதுவாக பயிர்களுக்கு அடியுரம் இடுவது இரண்டு வகைகளை சார்ந்திருக்கிறது.

அவற்றில் ஒன்று மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிடுவது மற்றொன்று தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பொது பரிந்துரைப்படி உரமிடுவது. மண் பரிசோதனை பரிந்துரைப்படி உரமிடுவது என்பது பயிர் செய்ய அடியுரம் இடுவதற்கு முன்னர் மண்ணை மண் பரிசோதனை கூடத்தில் ஆய்வு செய்து அதன் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் மண்ணில் உள்ள சத்துக்களின் அளவு எஞ்சியது போக மீதம் தேவைப்படும் உரங்களை அடியுரம், முதல் மேலுரம், இரண்டாவது மேலுரம் என பிரித்து இடுவதாகும். மற்றொரு முறையான பொது பரிந்துரைப்படி உரமிடுவது என்பது தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகமானது ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள மண் வகைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு பயிர்களின் சீரான வளர்ச்சிக்கு

தேவைப்படும் உர அளவுகளை துல்லியமாக கண்டறிந்து வழங்கியுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தின் கரிசல் மண் பகுதிகளில் பருத்தி பயிரிடுவதற்கு மொத்தமாக எக்டருக்கு 375 கிலோ சூப்பர் பாஸ்பேட் , 260 கிலோ யூரியா 100 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை இடவேண்டும். இவைகளில் எக்டருக்கு 375 கிலோ சூப்பர் பாஸ்பேட், 130 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாகவும் மீதமுள்ள 130 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை இரண்டாக பிரித்து முதல் மற்றும் இரண்டாது மேலுரங்களாக இட வேண்டும்.

அதேபோல் செம்மண் பகுதிகளில் பருத்தி பயிரிடுவதற்கு மொத்தமாக எக்டருக்கு 187 கிலோ சூப்பர் பாஸ்பேட், 130 கிலோ யூரியா, 50 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை இட வேண்டும். இவைகளில் எக்டருக்கு 187 கிலோ சூப்பர் பாஸ்பேட், 65 கிலோ யூரியா, 25 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை அடியுரமாகவும் மீதமுள்ள 65 கிலோ யூரியா மற்றும் 25 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றை இரண்டாக பிரித்து முதல் மற்றும் இரண்டாவது மேலுரங்களாக இடவேண்டும். இவ்வாறு மண் பரிசோதனை பரிந்துரைப்படியோ பொது பரிந்துரைப்படியோ உரமிடுவதால் தேவையற்ற உரங்கள் இடுவதை தவிர்த்து குறைந்த செலவில் அதிக மகசூல் பெறலாம். மேலும் செடிகளின் சரியான வளர்ச்சியை பாதுகாப்பதால் அதிக பூச்சி மற்றும் நோய் தாக்குதல்களை தவிர்க்க முடிகிறது. அதிக அளவிலான ரசாயன உரங்களால் ஏற்படும் மண் வளம் குன்றுதலை தடுத்து மண் வளத்தையும் பாதுகாக்க முடியும். அத்தோடு மட்டுமல்லாமல் மண்ணில் ரசாயன உரங்களின் தேக்கம் இல்லாததால் நன்மை பயக்கும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது.

இவ்வாறு ஒவ்வொரு பயிருக்கும் தொடர்ந்து மண் பரிசோதனை அடிப்படையிலோ பொது பரிந்துரைப்படியோ உரமிட்டு பயிர் செய்தால் மண்ணின் தன்மை பாதுகாக்கப்படுவதோடு நிலையான மகசூலும் பெறப்படுகிறது. எனவே அனைத்து விவசாயிகளும் மண் பரிசோதனை அடிப்படையிலோ அல்லது பொது பரிந்துரைப்படியோ உரமிட்டு செலவை குறைத்து அதிக மகசூலுடன் மண் வளத்தையும் பாதுகாக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அறுவடை பின்செய் நேர்த்தி தொழிற்நுட்ப பயிற்சி**

தஞ்சை, : தஞ்சை இந்திய பயிர் பதனிடும் ஆராய்ச்சி மையத்தில் திருவையாறு அட்மா திட்டத்தின்கீழ் அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. இந்திய பயிர் பதனிடும் ஆராய்ச்சி மைய இயக்குனர் சிங்கார வடிவேல் தலைமை வகித்தார். திருவையாறு வேளாண்மை உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் வரவேற்றார். வேளாண்மை இணை இயக்குனர் சேகர், வேளாண் வணிக வேளாண்மை அலுவலர் சாருமதி, சிவசங்கரி ஆகியோர் நெல்லில் மதிப்பு கூட்டு பொருட்களான கைகுத்தல் அரிசி, அவல், சிறப்பு அவல், வாழையில் கூழ் தயாரித்தல், தேங்காய் மதிப்பு கூட்டுதல் குறித்த தொழில்நுட்பங்கள் வழங்கப்பட்டது. வேளாண்மை அலுவலர் சிவகாமி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் மாதாலட்சுமி, உதவி தொழில்நுட்ப மேலாளர் பிறைசூடி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு யோசனை கோடை உழவுக்கு ஏற்ற தருணம் சம்பா சாகுபடிக்கு முன்**

சேதுபாவாசத்திரம், : சம்பா சாகுபடிக்கு முன் கோடை உழவுக்கு இதுவே ஏற்ற தருணம் என்று சேதுபாவாசத்திரம் பகுதி விவசாயிகளுக்கு

யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை:சம்பா சாகுபடிக்கு முன் கோடை உழவுக்கு இதுவே ஏற்ற தருணம். தற்போது கடந்த 2, 3 நாட்களாக சேதுபாவாசத்திரம் கடைமடை பகுதியில் கோடை உழவுக்கு ஏற்ற வகையில் கோடை மழை பெய்து வருகிறது. இதை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்து பயன்பெறலாம். முதலில் வயலை இரும்பு கலப்பை கொண்டோ அல்லது டிராக்டர் கொண்டோ குறுக்கும், நெடுக்குமாக ஆழமாக புழுதி உழவு செய்ய வேண்டும். இவ்வாறு கோடை உழவு மேற்கொள்வதால் புல், பூண்டுகள் வேர் அறுந்து கருகிவிடுகிறது. மண் பொளபொளப்பு தன்மை அடைகிறது. பயிர் பருவ காலங்களில் சிலவகை பூச்சிகளின் புழுக்கள் மண்ணுக்குள் சென்று கூண்டு புழுக்களாக மாறி பேரிச்சங்கொண்ட போன்ற உருவத்தில் மண்ணுக்கடியில் வளர்ந்து கொண்டிருக்கும் உழவு செய்வதன் மூலம் புழுக்கள் மண்ணின் மேற்பரப்புக்கு கொண்டு வரப்பட்டு அவை பறவைகளால் பிடித்து தின்று அழிக்கப்படுகிறது. இதன்மூலம் அடுத்த பயிர் சாகுபடியின்போது பூச்சிகளின் தாக்குதல் வெகுவாக குறைகிறது. களைச்செடிகள் முற்றிலும் அழிக்கப்படுகிறது. மண்ணில் நீர்ப்பிடிப்பு தன்மை பெருகிறது. மண்ணின் பவுதீக தன்மை மேம்படுகிறது. நாற்றங்கால் மற்றும் நடவு வயல் தயாரிப்பு மிகவும் எளிதாகிறது. உரம் சமச்சீராக கிடைத்து வேர் வளர்ச்சி தூண்டப்படுவதுடன் பயிர் செழித்து வளர்கிறது. இதனால் மகசூல் கூடுதலாக கிடைக்கிறது அதேநேரம் மணல்சாரி, களர் மற்றும் உவர் நிலங்களில் கோடை உழவை தவிர்க்க வேண்டும். காரணம் கோடை உழவால் மணல்சாரி நிலங்களில் ஈரத்தன்மை குறைகிறது. களர் மற்றும் உவர் நிலங்களில் நீர் ஆவியாகிவிடுவதால் உப்புத்தன்மை ஏற்படும் அபாயம் வரும்

**கம்பு பயிரில் அதிக லாபத்திற்கு எளிய வழி வேளாண்துறை ஆலோசனை**

பரமக்குடி, : தரமான கம்பு உற்பத்தி முறைகள் குறித்து வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர். கம்பு இறவையாகவும், மானாவாரியாகவும் எல்லா வகை நிலங்களிலும் பயிரி ஏற்றவை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்தவை ஆகும். மானாவாரியில் பயிரிட ஜுலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களும், இறவைக்கு ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்கள் ஏற்றவை ஆகும். கே.எம்.2, கோ.(சியு).9இ, ஐசிஎம்வி.221 ஏற்ற ரகங்கள் ஆகும். மானாவாரியாக இருந்தால் எக்டேருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். இறவையாக இருந்தால் எக்டேருக்கு 3.75 கிலோ தேவைப்படும்.

வறட்சியை தாங்கி வளர பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமை 1 லிட்டர் நீர் கலந்து கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து பின்பு நிழலில் உலர்த்தி தன் எடைக்கு உலர்த்திய பின்பு விதைக்க வேண்டும். 1 எக்டேருக்கு 12.5 கிலோ நுண்ணூட்டச் சத்து இட வேண்டும். நிலத்தில் ஈரம் இருக்கும்போது விதைத்த 3வது நாள் அட்ரசின் 1 எக்டேருக்கு 500 கிராம் களைக்கொல்லி மருந்தினை 900 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். அடியுரமாக 50% தழைச்சத்து முழுவதுமாக மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்தை இட வேண்டும்.மீதமுள்ள 50% தழைச்சத்து உரத்தை நட்ட 15வது நாள் மற்றும் 30வது நாள் பிரித்து மேலுரமாக இட வேண்டும். விதைத்தவுடன் 4வது நாளும் பின்னர் 7 முதல் 10 நாட்களுக்கு ஒருமுறை மற்றும் காலநிலைக்கு தகுந்தவாறு நீர் பாய்ச்ச வேண்டும். விதைத்த 15 மற்றும் 30ம் நாட்களில் களை எடுக்க வேண்டும். ஒருங்கிணைந்த பயிர்

பாதுகாப்பு முறைகள் மற்றும் பொருளாதார சேதார நிலை அறிந்து வேளாண்துறை அலுவலர் ஆலோசனையின்படி பயிர் பாதுகாப்பு மருந்துகள் உபயோகப்படுத்த வேண்டும். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**நாவினிக்கும் நாவல்பழம் விளைச்சல் அமோகம்**

திருப்புவனம், : திருப்புவனம் அருகே பூவந்தியில் ஆடி மாத சீசன் பழமான நாவல் பழ விளைச்சல் அதிகரித்துள்ளது. பூவந்தியில் இருந்து மேலூர் செல்லும் வழியில் சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் நாவல் பழ தோப்பு அமைந்துள்ளது. நாட்டு ரகத்தில் பழத்தின் அளவு சிறியதாக இருக்கும் ஆனால் ஒட்டு ரகத்தில் பழத்தின் அளவு பெரியதாகவும் சதைப்பற்றாகவும் இருக்கும் என்பதால் ஒட்டு ரகத்தையே அதிகளவு நடவு செய்துள்ளனர். சொட்டு நீர் பாசனம் மூலம் 24 மணி நேரமும் நாவல் பழ மரவேரில் தண்ணீர் விழும்படி செய்துள்ளனர். வீரிய ஒட்டு ரகம் என்பதால் மரம் நடவு செய்த ஒரு வருடத்தில் இருந்து பழம் பறிக்கலாம். பெங்களூருவை பூர்வீகமாக கொண்ட ரகம் என்பதால் விளைச்சலும் சற்று அதிகமாகவும் பழத்தின் அளவும் பெரியதாகவும் இருக்கும். ஆனி, ஆடி, ஆவணி ஆகிய மூன்று மாதங்கள் சீசன் என்பதால் தற்போது பழங்கள் அதிகளவு விளைச்சல் உள்ளது. பூவந்தியில் 50 ஏக்கர் பரப்பளவில் 100 மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. ஒரு மரத்தில் இருந்து தினசரி 5 கிலோ முதல் 8 கிலோ வரை பறிக்கலாம். சீசன் நெருங்க நெருங்க பழத்தின் அளவு அதிகரிக்கும். மதுரை, சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏராளமான வியாபாரிகள் பூவந்தியில் வந்து நாவல் பழம் வாங்கிச் சென்று விற்பனை செய்கின்றனர். பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் யார் வந்தாலும்

கிலோ ரூ.120 என விற்பனை செய்கின்றனர். வியாபாரிகள் 120 ரூபாய்க்கு வாங்கி சென்று கிலோ ரூ.200 வரை விற்பனை செய்கின்றனர்.

**சம்பா முன்பருவ முகாம்கள் 8 இடங்களில் நடக்கிறது**

புதுச்சேரி, : வேளாண்துறை கூடுதல் இயக்குனர் ரவிபிரகாசம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: விவசாயிகளுக்கு வரும் சம்பா பட்டத்துக்கு தேவையான நெல் விதைகள் புதுச்சேரி சான்றளிப்பு முகமையின் மூலம் சான்றளிக்கப்பட்ட ரகங்களான சாவித்திரி, வெள்ளி பொன்னி, பாபட்லா விதைகள் போதுமான அளவில் அந்தந்த பாசிக் உழவரகங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சாகுபடிக்கு தேவையான இடு பொருட்கள், உரங்கள், விதை நேர்த்திகேற்ற பூஞ்சாண மருந்துகள் ஆகியவை கையிருப்பில் உள்ளன. இவற்றை உழவர்கள் மானிய விலையில் பெற்று பயன் அடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.ஆத்மா திட்டத்தின் கீழ் புதுவை பிராந்தியத்தில் சம்பா முன் பருவ முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி இன்று கிருமாம்பாக்கம், மங்கலம் கிராமத்திலும், 30ம் தேதி(நாளை) பிளஸ் நல்லூர், கூடப்பாக்கம், 4ம் தேதி கரிக்கலாம்பாக்கம் செல்லிப்பட்டு, 5ம் தேதி அபிஷேகப்பாக்கம், தொண்டமாநத்தம், 6ம் தேதி கரியமாணிக்கம், சந்தைபுதுக்குப்பம், மேல்சாத்தமங்கலம், 11ம் தேதி சேலியமேடு, காலாப்பட்டு, திருக்கனூர், 12ம் தேதி ஒதியம்பட்டு, 13ம் தேதி மதகடிப்பட்டு ஆகிய பகுதிகளில் நடக்கிறது. விவசாயிகளுக்கு பயிற்சி கொடுக்க வேளாண் கல்லூரியிலிருந்து வல்லுனர்கள் சிறப்பு அழைப்பாளர்கள் வரவுள்ளனர். எனவே விவசாயிகள் சம்பா முன் பருவ முகாம்களில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தின நமி

**தமிழகம்- புதுச்சேரியில் மேலும் மழை**



சென்னை: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில் 2 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை காலம் நடைபெற்று வருகிறது. வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்து வருகிறது.

வெப்பச்சலனம் காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 2 நாட்கள் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். வடமேற்கு வங்கக்கடலில் கடலோரப்பகுதியில் காற்றழுத்த மண்டலமாக இருந்தது. அது மேற்கு வங்காளத்தில் ஆழ்ந்த காற்றழுத்த மண்டலமாக மாறி வங்காளதேச கடற்கரையை கடந்தது, ஆனால் அதற்கும் தமிழ்நாட்டுக்கு எந்த வித சம்பந்தமும் இல்லை. சென்னையை

பொருத்தவரை, வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணை இன்று முதல் தண்ணீர் திறக்க ஜெயலலிதா ஆணை**



சென்னை - ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களின் வாயிலாக முதல் போக பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன. வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, பவானிசாகர் அணையிலிருந்து அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி வாய்க்கால்களின் வாயிலாக முதல் போக பாசனத்திற்கு இன்று முதல் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.இதனால், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம், அந்தியூர் மற்றும் பவானி வட்டங்களில் உள்ள 24,504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**பீகாரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் அறிவியல் நகருக்கு கலாம் பெயர்: மாநில மந்திரி சபையில் முடிவு**



பாட்னா, ஜுலை 31-

பீகார் மாநில மந்திரி சபை நேற்று பாட்னாவில் கூடியது. இதில் மாநில அரசின் 36 வளர்ச்சி திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் அப்துல் கலாமுக்கு பெருமை சேர்க்கும் 2 திட்டங்கள் முக்கிய இடம் பிடித்தன.பீகாரின் கிஷன்கஞ்ச் பகுதியில் இருக்கும் வேளாண்மை கல்லூரிக்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் பெயரை சூட்ட முடிவு செய்யப்பட்டது. அதன்படி அந்த கல்லூரி இனிமேல் 'டாக்டர் கலாம் வேளாண்மை கல்லூரி, கிஷன்கஞ்ச்' என அழைக்கப்படும்.

இதைப்போல பாட்னாவுக்கு அருகே மாநில அரசு அமைக்க உத்தேசித்துள்ள அறிவியல் நகரத்துக்கு, 'டாக்டர் அப்துல் கலாம்

அறிவியல் நகரம்' என பெயர் சூட்டவும் மந்திரி சபை ஒருமனதாக முடிவு செய்தது.முன்னதாக மறைந்த ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு மந்திரி சபையில் இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது. அதில், 'பீகார் மீது கலாம் வைத்திருந்த பிணைப்பு ஒருபோதும் மறக்க முடியாதது. கடந்த 2006-ம் ஆண்டு நடந்த சட்டசபை கூட்டுக்கூட்டத்தில் உரையாற்றிய கலாம், மாநில வளர்ச்சிக்காக 10 அம்ச திட்டத்தை வழங்கினார்' என்று கூறப்பட்டு இருந்தது.மேலும், 'பீகார் மாநிலம் புகழ்பெற்ற கடந்த காலத்தை கொண்டுள்ளது. அந்த பாரம்பரியத்தை புதுப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என கலாம் கூறியிருந்தார். மாநிலத்துக்கு அடிக்கடி வந்து எங்களை வழிநடத்தி வந்தார். ஆனால் எங்களது சிறந்த வழிகாட்டியை நாங்கள் இழந்து விட்டோம். எனினும் அவர் எங்களுக்கு காட்டிய பாதையில் தொடர்ந்து நடைபோடுவோம்' என்று அந்த தீர்மானத்தில் கூறப்பட்டு இருந்தது.